Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 கதிர் : 032 | திங்கட்கிழமை | மார்கழி 13 ஆம் நாள் 28 டிசெம்பர் 2020 | வள்ளுவர் ஆண்டு 2051

பக்கங்கள்: 20 விலை : ரூ.30 செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

## கொரோனா காவு 191

கொழும்பு, டிசெ.28
இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் நால்வர் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன நேற்றிரவு அறிவித்துள்ளார். 19

# புதுக்குடியிருப்பில் வீரியமான வைரஸ்

## வடக்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் எச்சரிக்கை

- எழுமாறான சோதனையில் கண்டுபிடிப்பு
- புதிய கொத்தணி உருவாகும் அபாயம்
- 194 பேர் இதுவரை தனிமைப்படுத்தலில்



முல்லைத்தீவு, டிசெம்பர் 28
முல்லைத்தீவு – புதுக்குடியிருப்பு பகுதியில் அடையாளம் காணப்பட்ட தொற்றாளரின் மாதிரிகளில் வைரஸ் மிகவும் வீரியம் கூடியதாக காணப்படுகின்றது 19

## சங்கானையில் ஒருவருக்கு தொற்று

யாழ்ப்பாணம், டிசெ.28
மருதனார்மடம் சந்தை கொரோனாக் கொத்தணியில் நேற்று ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். யாழப்பாணம் போதனா மருத்துவமனை ஆய்வு 19

## மீண்டும் ஆனோல்ட்

### கூட்டமைப்பு விடாப்பிடி

யாழ்ப்பாணம், டிசெ.28
யாழ்ப்பாணம் மாநகர சபையின் மேயர் பதவிக்கு மீண்டும் ஆனோல்டை நிறுத்துவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முடிவு செய்துள்ளது. இருப்பினும் நல்லூர் பிரதேச சபை தவிசாளர் பதவிக்கு யாரை பிரேரிப்பது என்பது தொடர்பில் இன்றைய கூட்டத்தில் இறுதி செய்யப்படவில்லை.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்கு உட்பட்ட யாழ்ப்பாணம் மாநகர சபை மற்றும் நல்லூர் பிரதேச சபை என்பனவற்றின் 19

## 41,000 தொற்றாளர்

கொழும்பு, டிசெ.28
இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் 19

## சிறிய பாடசாலைகளில் கொரோனாச் சிகிச்சை!

கொழும்பு, டிசெ.28
தற்போது மூடப்பட்டுள்ள சிறிய பாடசாலைகளை அவசர காலங்களில் கொரோனா சிகிச்சைக்காக பெறுவது தொடர்பாக சுகாதார அமைச்சுக் கவனம் செலுத்தியுள்ளது. 19

## இரணைமடு குளத்தின் வான்கதவு திறப்பு

கிளிநொச்சி, டிசெ.28
இரணைமடு குளத்தின் இரண்டு வான் கதவுகள் நேற்று மாலை 5 மணிக்கு 6 அங்குல உயரத்துக்குத் திறந்து விடப்பட்டுள்ளன. குளத்துக்கு அதிக நீர் வரத்து ஏற்பட்டத்தை அடுத்தே வான்கதவு திறக்கப்பட்டுள்ளன.
இதனால் எந்தப் பாதிப்பும் இல்லை என்றும், ஆனால் மக்கள் விழிப்புடன் இருக்க 19

## வடக்குக்கு மீண்டும் சிவப்பு!

கொழும்பு, டிசெ.28
வடக்கில் எதிர்வரும் 24 மணி நேரத்தில் பலத்த மழைவீழ்ச்சி ஏற்படும் என்று அறிவித்துள்ள வளிமண்டலவியல் திணைக்களம், சிவப்பு எச்சரிக்கையும் விடுத்துள்ளது.
நாட்டை அண்டிய வளிமண்டலத்தில் காணப்படும் கீழ்மட்ட தளம்பல் நிலைமை காரணமாக நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் மழையுட 19



## யாழ்.நகர் ஆரியகுளத்தில் முதியவரின் சடலம் மீட்பு!

யாழ்ப்பாணம், டிசெ.28
யாழ்ப்பாணம் ஆரியகுளத்தில் இருந்து முதியவர் ஒருவர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டார். பருத்தித்துறைவீதி, யாழ்ப்பாண 19

## வரலாற்றை பதிவு செய்ய தமிழர்கள் தவறிவிட்டனர்!

### விக்னேஸ்வரன் வேதனை



யாழ்ப்பாணம், டிசெம். 28
தமிழர்கள் தமது வரலாறுகளை உரிய வகையில் பதிவு செய்யவில்லை. பெரும்பான்மை மக்களின் சாசனங்கள் வாயிலாக வரலாறுகள் தமிழர்க்கு எதிராகத் திரிக்கப்பட்டு எழுதப்பட்டு வருகின்றன. இவ்வாறு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பி 19

## திரையரங்கு திறக்க அனுமதி

கொழும்பு, டிசெ.28
சுகாதார வழிகாட்டல்களுக்கமைய ஜனவரி முதலாம் திகதி முதல் நாடளாவிய ரீதியில் உள்ள திரையரங்குகளைத் திறப்ப 19

## ராஜபக்ச அரசுக்கு எதிராக மைத்திரி 'குரூப்' மீண்டும் சதி!

### செஹான் சேமசிங்க குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ.28
ராஜபக்ச அரசுக்கு எதிராக மீண்டும் 2015ஆம் ஆண்டில் இடம்பெற்ற சூழ்ச்சியைப் 19

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# உதயன் மீதான பாய்ச்சல் அடக்குமுறையின் ஆரம்பமே!

## சிவசக்தி ஆனந்தன் சீற்றம்



**வவுனியா, டிசெ. 28**

**தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனின் ஒளிப்படத்தை பிரசுரித்த மைக் காக உதயன் பத்திரிகை மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டமையானது கண்டனத்திற்குரியது என்று தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் பொதுச்செயலரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.**

உதயன் மீதான பாய்ச்சல் எதிர்காலத்தில் ஊடகங்களை அடக்கி மௌனிக்கச் செய்வதற்கான ஆரம்ப சமிக்ஞையாகவுள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழின விடுதலைப் போராட்டம் பல தளங்களில் பல்வேறுபட்ட அமைப்புக்களால் முன்னெடுக்கப்பட்டிருந்தது. தமிழீழ விடுதலைப் புலிகளும் இனவிடுதலைக்கான போராட்டத்தை முன்னெடுத் திருந்தனர். அந்தப் போராட்டத்துக்கு தலைமை வகித்தவர் பிரபாகரன். இது தமிழினத்திலிருந்து என்றுமே பிரிக்க முடியாத வரலாறு. தமிழ் மக்களின் உயிர்நாடியாகச் செயற்பட்டு வரும் ஊடகமொன்று போராட்டத்தில் பங்கெடுத்த அமைப்பின் தலைவர் ஒருவரின் படத்தை பிரசுரிப்பதில் எந்தவிதமான தவறுகளும் இல்லை. மேலும், அதற்காக வழக்குத் தாக்கல் செய்யப்படுவதானது பலத்த சந்தேகங்களை ஏற்படுத்துவதாக உள்ளது.

வடக்கு கிழக்கை மையப்படுத்தி செயற்பட்டு வரும் ஊடகங்களில் காத்திரமானதொன்றாக இருப்பது உதயன் பத்திரிகை.

அதனைக் கட்டுப்படுத்துவதன் ஊடாக தமிழர்களுக்கு பின்னடைவுகளை ஏற்படுத்தலாம் என்ற செயற்பாடாகவே இதனைக் கருத வேண்டியுள்ளது. இன்று முறையற்ற காரணமொன்றை முன்வைத்து, உதயன் மீது நடவடிக்கைகள் எடுப்பதற்கு முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இது எதிர்காலத்தில் தமிழ் மக்களின் குரலாக இருக்கும் அனைத்து ஊடகங்களையும் மௌனமாக்குவதற்கான ஆரம்ப நடவடிக்கையாகும்.

கருத்துச் சுதந்திரத்தை நசுக்குவதன் மூலம் தமிழினத்தை அடக்குவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றனவா என்ற கேள்வியையும் ஏற்படுத்துகின்றது.

அதுமட்டுமன்றி மீண்டும் நாட்டை இருண்ட யுகத்துக்குள் தள்ளிவிடுவதற்கான சமிக்ஞையும் வெளிப்படுகின்றது, என்றார். (ஒ.110)

# உதயன் மீதான வழக்கு ஊடக அடக்குமுறையே

## ரவிகரன் காட்டம்



யாழ்ப்பாணம், டிசெ. 28

துவண்டு போய்விடாத உதயன் மீது மீண்டும் வழக்குப் பதிவு செய்திருப்பதானது ஊடக அடக்குமுறையின் வெளிப்பாடே என்று வடக்கு மாகாண முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்த கண்டன அறிக்கையில் மேலும் உள்ளதாவது;

கடந்த ஆட்சியாளர்களின் காலத்தில் பல உண்மைகளை வெளிக்கொணர்ந்த உதயன் ஊடக நிறுவனமும், அதில் பணியாற்றிய பணியாளர்களும் பலமுறை தாக்கப்பட்டிருப்பதும், படுகொலை செய்யப்பட்டிருந்ததும் யாவரும் அறிந்ததே. இருப்பினும் இவற்றுக்கெல்லாம் துவண்டுபோய்விடாத உதயன் ஊடக நிறுவனம், தனது ஊடகப் பணியை நடுநிலை தவறாது, மிடுக்குடன் தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றது.

விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனின் படத்தை வெளியிட்டதாக உதயன் ஊடக நிறுவனத்துக்கு எதிராக அரச தரப்பு வழக்கை தொடர்ந்திருக்கின்றது.

இது முற்றிலும் ஓர் ஊடக சுதந்திரத்துக்கு எதிரான அடக்குமுறைச் செயற்பாடாகும். ஊடகங்கள் எவ்வாறு படங்களை வெளியிடவேண்டும், எவ்வாறான செய்திகளை வெளியிடவேண்டும் என்பதை அரசோ, அரச பாதுகாப்புத் தரப்போ தீர்மானிக்க முடியாது. அந்தச் சுதந்திரமும், சுயாதீனத்தன்மையும் ஊடகங்களுக்கு இருக்கின்றன. அதற்கு யாரும் முட்டுக்கட்டையாக இருக்கக்கூடாது.

எனவே உதயன் ஊடக நிறுவனத்துக்கு எதிரான அரசின் ஊடக அடக்குமுறையை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன் என்றுள்ளது. (ப-246)

## வர்த்தக பயணிகளுக்காக நாடு திறக்கப்படமாட்டாது

### சிவில் விமான சேவைகள் அறிவிப்பு

கொழும்பு, டிசெ.28

ஏற்கனவே திட்டமிட்டபடி வர்த்தக பயணிகள் விமான சேவைக்காக நாடு திறக்கப்படாது என சிவில் விமான சேவைகள் அதிகார சபை தெரிவித்துள்ளது. அனுமதியளிக்கப்பட்ட விசேட விமானங்கள் மாத்திரமே நாட்டுக்குள் தரையிறங்க முடியும் என சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் தலைவர் உபுல் தர்மதாச தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பயணிகள் விமான சேவையை நேற்று (நேற்று முன்தினம்) முதல் மீள ஆரம்பிக்க ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், ஐரோப்பிய நாடுகளில் தற்போது தீவிரமாக பரவிவரும் புதிய வகை கொரோனா வைரஸ் தொற்றை கருத்தில்கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. எனினும் ரஷ்யா, உக்ரைன் மற்றும் கஜகஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்து அனுமதியளிக்கப்பட்ட விசேட விமாணங்களை நாட்டுக்குள் தரையிறக்க முடியும். ஏனைய நாடுகளிலிருந்து வரக்கூடிய பணியாளர்கள் கட்டாயம் 14 நாள்கள் தனிமைப்படுத்தலில் ஈடுபடுத்தப்படுவர்.

வெளிநாடுகளிலிருந்து தாயகம் திரும்ப எதிர்பார்க்கும் இலங்கையர்கள், வெளிவிவகார அமைச்சுக்கு அறிவித்து சிவில் விமான சேவைகள் அதிகார சபையிடம் அனுமதி பெற்றதன் பின்னர் நாட்டுக்குள் வர முடியும் என்றார். (ம-இ)

# முடிவை மீள் பரிசீலனை செய்வதே நியாயமானது

## இந்து சமயப் பேரவையின் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 28

நெருக்கடியான வேளையில் சேவையாற்றிய உதயன் பத்திரிகை மீது வழக்குத் தாக்கல் செய்வதன் மூலம் எதையும் சாதித்து விட முடியாது என்ற உண்மையை அரசு உணர்ந்து கொள்ள வேண்டும். மக்கள் உணர்வுக்கு மதிப்பளித்து முடிவை மறுபரிசீலனை செய்வதே நியாயமானது என்று யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையின் தலைவர் சி.சக்திகிரீவன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்த செய்திக்குறிப்பில் மேலும் உள்ளதாவது;

உலகில் பல்வேறு ஊடகங்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் சம்பந்தமான புகைப்படங்களையும் , செய்திகளையும் வெளியிடுகின்றன. இதற்காக அவ்வூடகங்களைத் தடை செய்யவோ அல்லது அவை மீது வழக்குத் தாக்கல் செய்யவோ முடியாதுள்ளது. இது இவ்வாறிருக்க உதயன் பத்திரிகை மீது மட்டும் வழக்குத் தாக்கல் செய்வதால் எதையும் சாதித்து விட முடியாது. நெருக்கடியான சூழலில் வேறு ஊடகங்கள் இல்லாத போது மக்கள் தகவல்களை அறிந்து கொள்ள உதயன் பத்திரிகை மேற்கொண்ட பணிகளை இந்நேரத்தில் ஞாபகப்படுத்த வேண்டியுள்ளது. போர் எதனால் உருவானது என்பதை நுணுகி அறிந்து அத்தகைய சூழல் ஏற்படாதிருக்க ஆக்கபூர்வமான தீர்வைக் கண்டு மக்கள் மனங்களை வெல்ல முன்வருவதே இன்றைய தேவையாகிறது என்றுள்ளது. (ப)

## சதொச தலைவர் பதவி விலகினார்

கொழும்பு, டிசெ.28

வர்த்தக அமைச்சின் கீழ் செயற்படும் லங்கா சதொச நிறுவனத்தின் தலைவராக இருந்த நுஷாத் பெரேரா, பதவி விலகியுள்ளார்.

அதிக வேலைப்பளு காரணமாகவே தான் இந்த முடிவை எடுத்தான் என்று அவர் கடிதத்தின் மூலம் தெரிவித்துள்ளார். தான் லங்கா சதொச சூப்பர்மார்க்கெட் நெட்வொர்க்கின் தலைவராகவும், சதொச தலைவராகவும் செயற்பட்டார் என்றும் அவர் அந்தக் கடிதத்தில் தெரிவித்துள்ளார். அதேநேரம் அவர் கடந்த நவம்பர் மாதமே பதவி விலகிவிட்டார் என்றும் நேற்றுத்தான் சதொச அவரின் பதவி விலகலை ஏற்றுக்கொண்டது என்றும் ஒரு தகவல் வெளிவந்துள்ளது. (ம)

# துப்பாக்கிச் சூட்டில் யானை உயிரிழப்பு

கொழும்பு, டிசெ.28

அநுராதபுரம் கஹடகஸ்திகிலிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நெலுகொல்லாகடை பகுதியில், காட்டு யானையொன்று துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளது.

நெலுகொல்லாகடை பகுதியில் காட்டு யானைகளின் அட்டகாசம் தொடர்பில் கஹடகஸ்திகிலிய பொலிஸ் நிலையத்துக்கு தொலைபேசி மூலம் அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்தது. பொலிஸார் யானைகளை விரட்டுவதற்காகச் சென்ற போது, யானையொன்று பொலிஸார் சென்ற வாகனத்தைத் தாக்குவதற்கு முற்பட்டுள்ளது. தற்பாதுகாப்புக்காக யானை மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. தற்செயலாக யானை துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தது என்று பொலிஸார் தெரிவித்தனர். (க-இ)

# ஹெரோய்ன் கடத்தியவர் பொலிஸாரால் கைது!!

கொழும்பு, டிசெ.28

ஹெரோய்ன் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் (வயது 36) பொலநறுவையில் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பொலநறுவையில் போதைப்பொருள் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போது இவர் கைதுசெய்யப்பட்டார்.

இவரிடமிருந்து 80 சிறிய பொதிகளில் அடைக்கப்பட்ட 12 கிராம் ஹெரோய்ன் கைப்பற்றப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் இந்த ஹெரோய்ன் போதைப்பொருளைக் கடத்தி சென்ற போதே இவர் கைதுசெய்யப்பட்டார் என்றுதெரிவிக்கப்பட்டது. (ற-இ)

# அங்கீகரிக்கப்படாத மருந்துகள் ஆபத்தையே விளைவிக்கும்

## நிபுணர்கள் எச்சரிக்கை

கொழும்பு,டிசெ.28

**பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு நிரூபிக்கப்படாத மருந்துகளை நோயாளிகளுக்கு வழங்குவது, விதிமுறையற்ற மற்றும் ஆபத்தான வழிமுறையாகும் என்று நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.**

கொரோனா வைரஸுக்கு எதிரான மருந்து என்ற வகையில் உற்பத்தி செய்யப்பட்டுள்ள, கேகாலை தம்மிக்க பண்டாரவின் ஆயுர்வேத மருந்து தொடர்பில் நிபுணர்கள் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளனர்.

இந்த மருந்து, அரச மருத்துவமனையின் கொரோனா நோயாளிகளுக்கு வழங்கப்பட்டு பரிசோதனை செய்யப்படுகின்றது என்று ஆயுர்வேத திணைக்கள ஆணையாளர் சத்து குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

எனினும் மருந்தின் ரகசியம் உற்பத்தியாளரான தம்மிக்க பண்டாரவுக்கே தெரியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் ஆராய்ச்சி மேம்பாட்டு நிறுவனத்தின் பணிப்பாளர் பேராசிரியர் அத்துல சுமதிபால மருந்து தொடர்பில் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஆயுர்வேத மருத்துவத்தில் பல ஆண்டுகால ஆவணப்படுத்தல் நிர்வாகத்தின் முடிவுகள் மற்றும் மாற்றங்கள் உள்ளன. எனினும் தமது அறிவின்படி தம்மிக்க பண்டாரவின் மருந்தில் தோற்றமும், வரலாறும் இல்லை.

இந்த மருந்தை சிறைக்கைதிகளுக்கு வழங்கும் செயற்றிட்டம் முன்னெடுக்கப்படுமானால், அது விதிமுறைகளுக்கு அப்பாற்பட்ட ஒன்றாகவே இருக்கும்.

1940 ஆம் ஆண்டு நாஸி அரசின் கீழ் மேற்கொள்ளப்பட்ட விதிமுறையற்ற மருத்துவ சோதனைகளுக்காக, 7 மருத்துவர்களுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (க-இ)

# சுற்றுலாப் பயணிகள் 500 பேருக்கு அனுமதி

கொழும்பு,டிசெ.28

முழுமையான சுகாதார ஒழுங்கு விதிகளின் கீழ், அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் 500 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டு ஜனவரி 19 ஆம் திகதி முதல் ஒரு பரீட்சார்த்த திட்டத்தின் கீழ், 12 இடங்களுக்கு சுற்றுலாப் பயணிகள் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக ரஷ்யா மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் இருந்து சுமார் 500 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு அழைத்து வரப்படவுள்ளனர்.

இலங்கையில் அவர்கள் செல்வதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 12 இடங்களில் யால, சிகிரியா, தலதா மாலிகை, பின்னவல மற்றும் மின்னேரியா ஆகியவை அடங்குகின்றன. ஆனால் அவர்கள் இலங்கை மக்களுடன் சேர்வதற்கு அனுமதியில்லை.

சுற்றுலாப் பயணிகள், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் அல்லது மத்தளை சர்வதேச விமான நிலையத்துக்கு வந்தவுடன் பி.சி.ஆர். சோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தப் பரீட்சாத்தத் திட்டம் பயனளித்தால், சுற்றுலாவுக்கு நாட்டை மேலும் திறக்க வழிகாட்டுதல்களில் திருத்தம் செய்யலாமா என்பதைத் தீர்மானிக்க ஒரு ஆய்வு மேற்கொள்ளப்படும் என்று சுகாதார தரப்புத் தெரிவித்துள்ளது. (க-இ)

# 36 குற்றக்குழுக்கள் நாட்டில் உருவெடுப்பு

## எச்சரிக்கின்றனர் பொலிஸார்

கொழும்பு,டிசெ.28

இலங்கையில் நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட 36 குற்றவியல் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன என்று பொலிஸ் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இது தொடர்பில் பொதுப் பாதுகாப்பு அமைச்சுக்கு பொலிஸார் தகவல் அளித்துள்ளனர்.

36 குழுக்களில், 24 குழுக்கள் தற்போது செயற்பாட்டில் உள்ளன.

இந்தக் குழுக்களை அடக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு பொலிஸாருக்கு, பொதுப் பாதுகாப்பு அமைச்சர் அட்மிரல் சரத் வீரசேகர உத்தரவிட்டுள்ளார். (க-இ)

# நிறைமாதப் பசுவொன்று இறைச்சிக்காக அறுப்பு!

## காட்டுக்குள் வீசப்பட்டது கன்று



வவுனியா, டிசெ. 28

வவுனியா பனிக்கர் புளியங்குளம் பகுதியில் விதவைப் பெண்ணொருவரால் பராமரிக்கப்பட்டு வந்த நிறைமாதப் பசு இனந்தெரியாதோரால் இறைச்சிக்காக வெட்டப்பட்டுள்ளது. தாய் வயிற்றில் இருந்த கன்று காட்டுப்பகுதியில் வீசப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அந்தப் பகுதி மக்கள் தெரிவித்ததாவது:

பனிக்கர் புளியங்குளம் பகுதியில் தொடர்ச்சியாக மாடுகள் களவாடப்பட்டு இறைச்சியாக்கப்படுகின்றன. மான் மற்றும் மரை இறைச்சி என அவை விற்பனை செய்யப்படுகின்றன. வவுனியாவில் பரவலாக இவ்வாறான சம்பவங்கள் அதிகரித்துவரும் நிலையில் தற்போது பெண் தலைமைத்துவக் குடும்பமொன்றின் பசுவும் களவாடப்பட்டு இறைச்சியாக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்ட போதிலும் இதுவரை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்கின்றனர். (ம-110)

# முழங்காவில்

## கதிராவில்குளம் உடைப்பெடுக்காமல் உரிய நடவடிக்கைகள் முன்னெடுப்பு!

முல்லைத்தீவு, டிசெ. 28

முழங்காவில் கதிராவில் குளம் நேற்றுமுன்தினம் காலை உடைப்பெடுக்கும் ஆபத்து ஏற்பட்டிருந்த நிலையில், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளால் அந்த ஆபத்துத் தவிர்க்கப்பட்டது.

மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைப்பாளரும், முன்னாள் மாகாண சபை உறுப்பினருமான வை. தவநாதனுக்குத் தகவல் வழங்கப்பட்டதையடுத்து அவர் மேலதிக இணைப்பாளர் கோ. றுஷாங்கனுடன் இணைந்து மாவட்ட நீர்ப்பாசன பொறியியலாளர் த.ராஜகோபு மற்றும் கமநல சேவைகள் ஆணையாளர் தேவேந்திரன் ஆகியோரைத் தொடர்பு கொண்டு குளம் உடைப்பெடுக்காமல் தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டதை அடுத்து உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. (ம-இ)

# வவுனியா சந்தையில் 140 பேருக்கு பி.சி.ஆர்.




வவுனியா.டிசெ.28

வவுனியா மரக்கறி சந்தை மற்றும் அதனுடன் தொடர்புடைய 140 பேருக்கு, இரண்டாம் கட்டமாக நேற்று பி.சி.ஆர். பரிசோதனைக்கான மாதிரிகள் பெறப்பட்டன.

வவுனியா மொத்த விற்பனைச் சந்தையில் பணிபுரியும் 100 க்கும் மேற்பட்ட பணியாளர்களுக்கு கடந்த வாரம் பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது. அவர்களில் எவருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்படவில்லை.

இந்த நிலையில் வவுனியா மரக்கறிச்சந்தை மற்றும் அதனுடன் தொடர்புடைய 140 பேரிடம், சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையினரால் மாதிரிகள் பெறப்பட்டன. (க-110)



# தவறுகளை மறைக்கவே சஜித் தரப்பு போராட்டம்

## சிங்கள ராவய சுட்டிக்காட்டு

கொழும்பு.டிசெ.28

சஜித் தரப்பினர் தமது ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற தவறுகளை மறைத்துக்கொள்வதற்காக, தற்போது சட்டலகளை பயன்படுத்திக்கொள்ள முற்படுகின்றனர் என்று சிங்கள ராவய அமைப்பின் பொதுச்செயலாளர் மாகல்கந்தே சுதந்த தேரர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

**சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட எதிர்த்தரப்பினர் பௌத்த, இந்து மற்றும் கத்தோலிக்க சமூகத்தினரின் உரிமைகளை உறுதிசெய்வதற்காக முன்னின்று செயற்பட்டதோ அல்லது ஆர்ப்பாட்டம் செய்ததோ இல்லை.**

வடக்கு, கிழக்கு பகுதிகளில் இடம்பெறும் காணி சுவீகரிப்பு மற்றும் புராதன தொல்பொருள் சின்னங்கள் அழிக்கப்படல் தொடர்பில் அவர்கள் தேடிப்பார்க்க வேண்டும்.

ஆனால் ஒருபோதும் அவர்கள் அதனைச் செய்யமாட்டார்கள்.

நல்லாட்சி அரசில் நாட்டின் சட்டம் துஸ்பிரயோகம் செய்யப்பட்டது. அவர்களுடைய ஆட்சியின்போது ஷானி அபேசேகர, நிஷாந்த சில்வா போன்றோர் பொய்யான சாட்சியங்களைச் சோடித்து, சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்தியபோது, அதுகுறித்து சஜித் பிரேமதாஸ தரப்பினர் ஏன் பேசவில்லை?. என்றார். (க-இ)

# வைரஸ் உருமாற முதல் கட்டுப்படுத்தல் வேண்டும்


## சுகாதார அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 28

நாட்டில் வைரஸ் பிறழ்வு ஏற்படக்கூடும் என்பதால் கொரோனாத் தொற்றை முடிவுக்குக் கொண்டுவருவது மிக முக்கியமானது என சுகாதார அமைச்சின் தொற்று நோய் பிரிவின் விசேட மருத்துவ நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தாவது:

கொரோனா வைரஸ் பிரித்தானியா அல்லது ஐரோப்பாவில் மட்டுமல்ல இலங்கையிலும் மாறக்கூடும் என்பதால் விரைவில் வைரஸிலிருந்து விடுபடுவது மிக முக்கியமானது. ஒருவர் புதிய கொரோனா பிறழ்வுக்கு ஆளானாரா என்பதை அடையாளம் காண்பது கடினம். ஏனெனில் பெரும்பாலான கொரோனாத் தொற்று நோயாளர்கள் அறிகுறியற்றவர்கள். ஒரு சாதாரண பி.சி.ஆர். சோதனையால் வைரஸின் விகாரத்தை வேறுபடுத்த முடியாது. ஒக்ரோபர் தொடக்கத்தில் கண்டறியப்பட்ட கொரோனாப் பெருந்தொற்றின் இரண்டாவது அலை ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. மக்கள் ஒத்துழைத்தால் விரைவில் முழுமையாகக் கட்டுப்படுத்தலாம் என்றார். (ம)



## கிளி. கல்மடு பகுதியில் யானை சடலமாக மீட்பு

கிளிநொச்சி, டிசெ. 28

கிளிநொச்சி கல்மடு பிரதேசத்தில் யானையொன்று நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளது.

அடர் காட்டுக்கு அருகில் உள்ள பகுதியிலேயே மேற்படி யானை இறந்து கிடந்துள்ளது. அந்தப் பகுதியில் உள்ள வயலுக்கு வந்த யானை பயிர்களை உணவாக்கி அழித்துள்ளதுடன் அதே இடத்தில் விழுந்து இறந்துள்ளது. இது தொடர்பில் தர்மபுரம் பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்டது. அவர்கள் வன உயிரிகள் திணைக்களத்துடன் இணைந்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-6)




## ஜனாஸாக்கள் எரிப்பதை எதிர்த்து போராட்டம்

மட்டக்களப்பு, டிசெ. 28

ஜனாஸாக்கள் எரிப்பதை எதிர்த்து வாழைச்சேனை பிரதேசத்தில் கபன் வெள்ளைத் துணி கட்டி அமைதியான அடையாள எதிர்ப்புப் போராட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இதன்போது, கொரோனா வைரஸ் தாக்கத்தின் காரணமாக உயிரிழந்த முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் எரிப்பதை அரசாங்கம் உடனடியாக நிறுத்தி, அவர்களது ஜனாஸாக்களை இஸ்லாமிய முறைப்படி புதைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்தனர். (ரி5-150)

## சரணாகதியா?, தனிவழியா? கூடுகிறது சு.க. மத்திய குழு!

கொழும்பு, டிசெ.28

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் எதிர்வரும் 30 ஆம் திகதி இரவு 7 மணிக்கு கட்சித் தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெறவுள்ளது.

சமகால அரசியல் நிலவரங்கள் குறித்தும், அடுத்தகட்ட அரசியல் நகர்வுகள் தொடர்பிலும் இந்தக் கூட்டத்தில் விரிவாக கலந்துரையாடப்படவுள்ளன என்று அறியமுடிகின்றது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் செயற்பாடுகள் தொடர்பில் சுதந்திரக் கட்சி கடும் அதிருப்தியில் இருக்கின்றது. தமது கட்சிக்கு உரிய கவனிப்புகள் இல்லை என சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் வெளிப்படையாகவே விமர்சித்து வருகின்றனர். எனினும், ஆளுங்கூட்டணியிலிருந்து வெளியேறுவதா, இல்லையா என்பது தொடர்பில் அந்தக் கட்சி எதுவும் கூறவில்லை.

ஆனாலும் சு.கவிலுள்ள ஒரு சிலர் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணையலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. மாகாண சபைத் தேர்தலில் தனித்து அல்லது எதிரணியுடன் கூட்டணி அமைத்து களமிறங்க வேண்டும் என்ற யோசனையும் சுதந்திரக் கட்சிக்குள் ஒரு சிலரால் முன்வைக்கப்பட்டுள்ளது. இந்தப் பின்னணியில் அந்தக் கட்சியின் மத்திய செயற்குழு கூடவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரை சந்தித்து பேச வேண்டிய விடயங்கள் பற்றியும் இங்கு விவாதிக்கப்படவுள்ளது என்று அறிய முடிகின்றது. (எ-44)



தாயக விருட்சம் சுவிஸ் அறக்கட்டளையின் ஒழுங்கமைப்பில் ஜெப்ரிவரன்ஜா குடும்பத்தினரின் நிதிப்பங்களிப்பில் முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பொன்நகர், விநாயகபுரம், பூவரசங்குளம் ஆகிய கிராமங்களில் தெரிவுசெய்யப்பட்ட 10 வயோதிபர்களுக்கான உலர் உணவுப் பொதிகள் மற்றும் 20 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (சு-222)

## 12 வயதுப்பிரிவினருக்கு இனிச் சுற்றுப்போட்டிகள்

### வடக்கு கல்வி அமைச்சின் செயலர் இளங்கோவன் இவ்வாறு தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 28

பாடசாலை மட்டத்தில் விளையாட்டுச் சங்கங்களை இயங்கச் செய்து 12 வயதுப் பிரிவினருக்கான சுற்றுப்போட்டியை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று வடமாகாண கல்வி அமைச்சின் செயலர் இ.இளங்கோவன் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட விளையாட்டுத் துறை ஆலோசகரும் வடமாகாண உடற்கல்வி டிப்ளோமாதாரிகள் சங்கத் தலைவருமான ப.தர்மகுமாரன் தலைமையான குழுவினருக்கும் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கும் இடையிலான சந்திப்பின் போதே செயலாளரால் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் எதிர்காலத்தில் விளையாட்டுத் துறையை பாடசாலை மட்டத்தில் கொண்டு செல்வதற்கான திட்டங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டன. பாடசாலை மட்டத்தில் மாணவர்களின் சுகாதாரம் உடற்திணிவுச் சுட்டி, உணவுப் பழக்கவழக்கம் என்பவற்றில் பாடசாலை சமூகம் அதீத அக்கறை காட்டி செயலாற்றுவதற்கான நடவடிக்கைகளும் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படும். அத்துடன் விளையாட்டுத் துறையின் வளர்ச்சிக்கு சுகாதார அபிவிருத்தி தொடர்பான முன்மொழிவுப் பத்திரம் ஒன்றும் விளையாட்டுத்துறை ஆலோசகரால் செயலாளர் இளங்கோவனிடம் கையளிக்கப்பட்டது.

இந் நிகழ்வில் உடற்கல்விப் பணிப்பாளர் இராஜசீவகன், கல்வி அமைச்சின் நிர்வாக உதவியாளர் விஸ்வலிங்கம் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ம-50)

## கைதிகளை மீட்க பரவலான சந்திப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.28

தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டு வரும் குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஏற்பாட்டில், கைதிகளின் உறவினர்கள், அரசியல் கட்சிகளின் தலைவர்களையும், ஆன்மீகத் தரப்பினரையும் சந்தித்து வருகின்றனர்.

அதற்கமைவாக தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன், நல்லூர் ஆதீனக் குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள், தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான சி.வி.கே.சிவஞானம், யாழ். நாகவிகாரை பீடாதிபதி விமல தேரர் உள்ளிட்டவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினர். (க)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மக்களா? கதிரையா?

மக்களுக்குச் சேவை செய்வதே தங்களின் முதல் இலக்கு என்று தேர்தல் காலங்களில் சத்தியம் செய்த அரசியல்வாதிகள், தேர்தலின் பின்னர் பதவிகளுக்கு வந்த பின்னர் மக்கள் பற்றி கிஞ்சித்தும் கவலை கொள்வதில்லை.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் இப்போதைய நிலைமையும் அவ்வாறானதே. யாழ்ப்பாணம் மாநகர சபையின் பாதீடு இரு தடவைகள் திட்டமிட்டுத் தோற்கடிக்கப்பட்டுள்ளது. சபை முதல்வரான இ.ஆனோல்ட் இப்போது பதவியை இழந்திருக்கின்றார். சபையின் முதல்வர் வேட்பாளர் யார் என்பது பற்றி இப்போது விவாதங்கள் நடக்கின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கையில் உள்ள யாழ்ப்பாணம் மாநகர சபையின், பாதீடு தோற்கடிக்கப்பட்டதன் பின்னணியிலும் மக்கள் நலன் சார்ந்த காரணங்கள் எவையும் இருப்பதாக இல்லை. மாநகர முதல்வர் பதவியில் இருந்த ஆனோல்டை தோற்கடிக்க வேண்டும் என்பதற்காக ஒரு தனி மனிதருக்கு எதிரான நடவடிக்கையாகவே பாதீடு தோற்கடிக்கப்பட்டுள்ளது. பாதீட்டுக்கு எதிராக வாக்களித்த உறுப்பினர்களில் சிலர் இதை வெளிப்படையாகக் கூறியுமிருக்கின்றனர்.

இப்போது, அடுத்த முதல்வர் யார் என்ற விவாதம் நடந்து கொண்டிருக்கையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (இலங்கைத் தமிழரசுக் கட்சி) மீண்டும் முதல்வராக ஆனோல்ட்டையே களமிறக்குவது என்பதில் தீவிரமாக இருக்கின்றது. தற்போதைய நிலைமையின்படி, அவரே மீண்டும் முதல்வர் வேட்பாளராக்கப்படுவார் என்று தெரிகின்றது.

ஆனோல்ட்டுக்கு எந்தக் காரணத்துக்காகவும் ஆதரவு வழங்க மாட்டோம் என்று சபையில் அங்கம் வகிக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி என்பவை தீர்க்கமாக அறிவித்திருக்கும் நிலையில், இலங்கைத் தமிழரசுக் கட்சி இந்த நகர்வை எடுத்திருக்கின்றது.

வேறு எந்த வேட்பாளரை நியமித்தாலும் ஆதரவு வழங்கத் தயார் என்று சபையில் அங்கம் வகிக்கும் கட்சிகள் தெரிவித்திருக்கும் நிலையில் அந்த இலகுவழியைத் தவிர்த்து மீண்டும் தோல்வியடைய பெரும்பான்மைச் சந்தர்ப்பங்கள் இருக்கும் கரடுமுரடான நகர்வை இலங்கைத் தமிழரசுக் கட்சி மேற்கொள்வது சில கேள்விகளையும் தோற்றுவிக்கின்றது.

கட்சித் தலைமைகளின் முடிவுகளை மீறி உறுப்பினர்கள் திடீரென மனம் மாறுவது அதுவும் தங்கள் பதவிக்கே உலை வைக்கும் முடிவுகளை எடுப்பது என்பது இயல்பானதன்று. முன்னாள் முதல்வர் மீண்டும் வேட்பாளராக்கப்பட்டு உறுப்பினர்களின் ஆதரவு பெற்று வெற்றி பெறும் பட்சத்தில், உள்ளே ஒரு குதிரைப் பேரம் நடந்திருக்குமோ என்ற கேள்வி எழும். அதேநேரம் முன்னாள் முதல்வரை மீண்டும் முதல்வராக்கி விட்டாலும், அதன் பின்னர் பாதீடு நிறைவேற்றம் என்ற விடயமும் காத்திருக்கின்றது. அதில் மீண்டும் தோல்வியைச் சந்திக்காதிருக்கப் பேரங்கள் பேச வேண்டி ஏற்படலாம் ஏற்படும்.

தற்போதுள்ள பிரச்சினையை இலகுவாக முடித்து மக்களுக்கான சேவைகளை முன்னெடுத்துச் செல்லும் வழி இருக்க தங்களுக்கான இலாபங்களுக்காக கட்சிகளின் இலாபங்களுக்காக இந்த விவகாரம் இழுத்துச் செல்லப்படுகின்றது என்றே தோன்றுகின்றது.

அரசியலுக்கு வருவோர் எப்போது தங்கள் சுயலாபங்களை மறந்து மக்கள் பற்றி எப்போது சிந்திக்க ஆரம்பிக்கிறார்களோ, அப்போதுதான் எமக்கான விடிவு கிட்டும். அவ்வாறு எப்போது சிந்திக்க ஆரம்பிப்பார்கள் என்பது கடவுளுக்குத்தான் வெளிச்சம்.

# கொரோனா அபாய வலயங்கள் வடக்கிலும் விரிவடைகின்றன

**கொழும்பு, டிசெ. 28**
**வடக்கு மாகாணத்தில் 7 இடங்கள் கொரோனா அபாய வலயங்களாக உள்ளடக்கப்பட்டுள்ளன.**

தேசிய ரீதியில் கொரோனா அபாய வலயங்களாக அடையாளப்படுத்தப்பட்ட இடங்களில் வடக்கு மாகாணத்தின் மன்னார் மாவட்டம் தவிர்ந்த ஏனைய மூன்று மாவட்டங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. சுகாதார அமைச்சு இந்த விவரங்களை வெளியிட்டுள்ளது.
யாழ்ப்பாணத்தில் உடுவில், கோப்பாய், பருத்தித்துறை, சண்டிலிப்பாய் ஆகிய பிரிவுகளும், கிளிநொச்சி மாவட்டத்தில் கிளிநொச்சி நகரப் பகுதியான கரைச்சியும், முல்லைத்தீவு நகரப் பகுதியும், வவுனியாவும் அபாய வலயங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.
பிரதேசத்துக்குப் பொறுப்பான சுகாதார மருத்துவ அதிகாரிகளின் வகைப்படுத்தல், பதிவான நோயாளர்களின் எண்ணிக்கை மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட மையங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் இந்த வரைபடம் வெளியிடப்பட்டுளளது. எடுக்கப்பட்ட நோயாளிகளின் விவரங்கள் டிசெம்பர் 19ஆம் திகதியுடன் முடிவடைந்த கடைசி 14 நாள்களுக்குள் பதிவாகியுள்ளன. (ஒ.இ)



## தூர இடங்களுக்கான பஸ் சேவை ஆரம்பம்

கொழும்பு, டிசெ. 28
கொரோனா காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்த தூர இடங்களுக்கான பஸ் சேவை எதிர்வரும் ஜனவரி மாதத்திலிருந்து சுகாதார நடைமுறைகளை இறுக்கமாகப் பின்பற்றி ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார். (ஒ.இ)

## ரணில் இறுதிச் சந்திப்பு

கொழும்பு, டிசெ. 28
ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களை நாளைமறுதினம் 30ஆம் திகதி புதன்கிழமை சிறிகொத்தாவில் ரணில் விக்கிரமசிங்க சந்திக்கவுள்ளார். இந்த ஆண்டின் இறுதிச் சந்திப்பாக இது அமையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
மாகாண சபை தேர்தல் மற்றும் கட்சியின் அடுத்த ஆண்டுக்கான செயற்பாடுகள் குறித்து இதன்போது ஆராயப்படவுள்ளன. இந்தச் சந்திப்புக்கான ஒழுங்குகளை முன்னெடுக்குமாறு பிரதித்தலைவர் ருவன் விஜேவர்தனவுக்கு ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார். ஆளும் கட்சி தொடர்பில் மக்கள் நம்பிக்கையிழந்துள்ள நிலையில் மிகப் பெரிய போராட்டங்களை நடத்துவது தொடர்பிலும் இதன்போது ஆராயப்படவுள்ளது. (ஒ.இ)

## ஆசிரிய ஆட்சேர்ப்புக்கான வர்த்தமானி வெளியிடப்படும்

*மேல் மாகாண ஆளுநர் தெரிவிப்பு*

கொழும்பு, டிசெ.28
மேல் மாகாணத்தில் நிலவும் ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புவதற்காக ஆட்சேர்ப்புக்கான நடைமுறை தொடர்பான வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்படும் என்று மாகாண ஆளுநர் ரொஷான் குணதிலக நேற்று தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
ஆட்சேர்ப்பு தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களுக்கான நேர்முகப் பரீட்சையைத் தொடர்ந்து புதிய நியமனங்கள் வழங்கப்படும்.
அந்த வகையில் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான ஆசிரியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான வர்த்தமானி அறிவிப்பு விரைவில் வெளியாகும். மேல் மாகாணத்தில் அனைத்துப் பாடங்களிலும் ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் அதிகம் உள்ளன எனத் தெரிவித்துள்ளார். (வ-இ)

## சபாநாயகர் தனிமைப்படுத்தலில்!

கொழும்பு, டிசெ.28
சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன மற்றும் அவரது குடும்பத்திலுள்ள சிலரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.
இவர்களிடம் நேற்று பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது.
சபாநாயகரின் பாதுகாப்புப் படையில் உள்ள அதிகாரி ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்தே இவர்கள் தனிமைப்படுத்தப்பட்டனர். இதையடுத்து அவருடன் நெருங்கிப் பழகிய ஊழியர்கள் பலரும் தனிமைப்படுத்தப்பட்டனர் எனத் தெரியவருகிறது. (ற-இ)

## கோத்தாவின் தேர்தல் அறிக்கை உறுதிமொழியுரையில் இணைப்பு

கொழும்பு, டிசெ. 28
புத்தாண்டு அன்று அரச பணியாளர்கள் பணிகளை ஆரம்பிக்கும்போது, பொதுமக்களுக்கு சேவை செய்வோம் என உறுதியுரை செய்வதுடன், ஜனாதிபதி கோத்தபாயவின் தேர்தல் அறிக்கையை செயற்படுத்தும் உறுதியுரையையும் செய்து கொள்ளவுள்ளனர்.
இது தொடர்பான சுற்றறிக்கைகள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ஒ.இ)

# மன்னாரைக் காப்பாற்றுவதற்கு இயற்கையை பாதுகாக்குக!

## பிரதம கணக்காளர் எம்.செல்வரட்ணம் வலியுறுத்து

மன்னார், டிசெ. 28

**சுனாமி முல்லைத்தீவு மாவட்டத்தை நாசம் பண்ணியபோதும் மன்னார் மாவட்டம் காப்பாற்றப்பட்டதற்குக் காரணம் அன்று மன்னாரில் இயற்கை வளம் சிறப்பாகப் பாதுகாக்கப்பட்டமையே என்று தெரிவித்தார் மன்னார் மாவட்டச் செயலக பிரதம கணக்காளர் எம்.செல்வரட்ணம்.**

சுனாமி நினைவேந்தல் நிகழ்வு மன்னார் மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

2004ஆம் ஆண்டு இடம்பெற்ற ஆழிபேரலையானது மன்னார் மாவட்டத்தில் பெரும் அழிவுகளை ஏற்படுத்தவில்லை. இதற்குக் காரணம் மன்னாரில் பாதுகாக்கப்பட்ட இயற்கை வளமும் ஆகும். மன்னார் கடலில் இயற்கையின் ஆசீரால் கண்டல் தாவரங்கள் மற்றும் பவளப் பாறைகள் நிறைந்துள்ளன. அன்று இவை சிறப்பாகப் பாதுகாக்கப்பட்டதால் மன்னார் மக்களை இயற்கையும் பாதுகாத்தது. ஆனால் தற்போது அவை வகைதொகை இன்றி அழிக்கப்பட்டு வருகின்றன.

மன்னார் நகரம் கடல் மட்டத்திலிருந்து மிகத் தாழ்வாகக் காணப்படுகின்றது. இந்த நிலையில் மன்னார் பகுதியில் மணல் அகழ்வு, கடலிலுள்ள பவளப் பாறைகள் அழிப்பு போன்ற துர்ச்செயல்களைச் செய்தால் அழிவு எமக்குத்தான். இதை உணர்ந்து அனைவரும் செயற்பட வேண்டும் - என்றார். (ம-60)



பருத்தித்துறை

# மருத்துவமனையில் புதிய கட்டடம் திறப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.28

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில், அனைத்து ஊழியர்களுக்குமான சிற்றுண்டிச்சாலை, மருத்துவர்கள் ஓய்வறை, மருத்துவ நூலகம் ஆகியவற்றுடன் இணைந்த புதிய கட்டடம் நேற்றுத் திறக்கப்பட்டது.

மருத்துவமனையின் துரித அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், வடமராட்சியைச் சேர்ந்த மருத்துவர்களின் நிதிப் பங்களிப்பில் இந்தக் கட்டடம் அமைக்கப்பட்டது.

வடமராட்சியின் ஒப்பற்ற உயிரியல் ஆசான்கள் தம்பிராசா மற்றும் குணசீலன், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் சற்குணராஜா ஆகியோர் கட்டடத்தைத் திறந்தனர். (க-222)

# அரசுக்கு எதிராக மீண்டும் சூழ்ச்சி!

கொழும்பு, டிசெ. 28

அரசுக்கு எதிராக மீண்டும் சதித்திட்டங்கள் தீட்டப்படுகின்றன என்று இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தாவது:

அரசுக்குள் இருந்துகொண்டே அரசுக்கு எதிரான செயற்பாடுகளை சிறிலங்கா சுதந்திரக் கட்சி மேற்கொண்டு வருகின்றது. இது ஏற்பதற்கு உகந்ததல்ல. சூழ்ச்சியில் ஈடுபடுவோரை விரைவில் நாம் அம்பலப்படுத்துவோம் - என்றார். (ம-இ)

# மாட்டுடன் மோதி இளைஞன் காயம்

வரணி,டிசெ.28

மோட்டார் சைக்கிளில் வேலைக்குச் சென்ற இளைஞர் ஒருவர், மாட்டுடன் மோதி விபத்துக்குள்ளானார்.

இந்த விபத்து வரணி பாடசாலைக்கு அருகில் நடந்துள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிளும் சிறிய சேதமடைந்தது. காயமடைந்த இளைஞன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (க-159)

# போதிய உணவின்றி இறக்கும் மாடுகள்

## பண்ணையாளர் கவலை




கிளிநொச்சி,டிசெ.28

போதுமான உணவின்றி நாளாந்தம் மாடுகள் இறப்பதுடன், சேலைன் ஏற்றியும் மாடுகளைக் காப்பாற்ற முடியவில்லை என்று பண்ணையாளர் கவலை வெளியிட்டுள்ளார்.

கிளிநொச்சி கோணாவில் கிராமத்தில் 500 மாடுகளை வளர்த்து வளரும் தங்கவேலு சுரேந்திரன் இந்த அவலத்தை எதிர்கொண்டுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் மாடுகளை வளர்ப்பதற்குரிய மேய்ச்சல் தரைகள் இல்லை. அதனால் போதுமான உணவுகள் கிடைப்பதில்லை. சில நாள்களுக்குள் எட்டு மாடுகள் இறந்துள்ளன. உணவின்றி பசியால் நடக்க முடியாத நிலையில் உள்ள மாடுகளுக்கு சேலைன் ஏற்றினேன். ஆனாலும் அவற்றில் சில மாடுகளும் இறந்துள்ளன.

ஒவ்வொரு வருடமும் பருவமழைக் காலங்களில் பெரும்பாலான நிலங்களில் நெற்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுவதால், 500 மாடுகளையும் மேய்ச்சலுக்கு விடுவதில் நெருக்கடி ஏற்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-214)



# புதிய வகை கொரோனாவுக்கு விசேட தடுப்பு நடவடிக்கைகள்

கொழும்பு. டிசெ.28

பிரிட்டனில் பரவியுள்ள உருமாறிய கொரோனா வைரஸ் இலங்கையில் பரவாதிருக்க விமான நிலையங்கள் மற்றும் துறைமுகங்களில் விசேட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்படி, நாட்டின் சகல துறைமுகங்களிலும் சுகாதார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என துறைமுக அதிகாரசபையின் தலைவர் மேஜர் ஜெனரல் தயா ரட்நாயக்க தெரிவித்துள்ளார். மேலும், விமான நிலையங்களிலும். சகல நடவடிக்கையும் சுகாதார விதிமுறைகளின்படி முன்னெடுக்கப்படுகின்றன என விமான நிலைய மற்றும் விமான சேவை நிறுவனத் தலைவர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ சந்ரசிறி தெரிவித்துள்ளார். (வ-இ)

# மாகாணத் தேர்தல் தொடர்பில் ஆளுங்கட்சிக்குள் மோதல்கள்!

கொழும்பு, டிசெ. 28

மாகாணசபைத் தேர்தல் தொடர்பில் ஆளுங்கட்சிக்குள் கருத்து மோதல் ஏற்பட்டுள்ளது. தேர்தலை விரைவில் நடத்துமாறு ஒரு சிலரும், அவ்வாறு நடத்தப்படக்கூடாது என வேறு சிலரும் வலியுறுத்தி வருகின்றனர்.

பொதுஜன பெரமுனவிலுள்ள முன்னாள் மாகாணசபை உறுப்பினர்களே தேர்தல் நடத்தப்பட வேண்டும் என அரச உயர்மட்டத்திடம் கோரிக்கை விடுத்து வருகின்றனர். சரத் வீரசேகர மற்றும் அரசுக்கு சார்பான தேரர்கள் தேர்தல் நடத்தப்படக்கூடாது என கருத்துரைத்து வருகின்றனர். இதனால் ஆளுங்கட்சிக்குள் குழப்பநிலை உருவாகியுள்ளது.

மாகாணசபைத் தேர்தல் தொடர்பில் கருத்து வெளியிட்ட வடமத்திய மாகாண சபையின் முன்னாள் முதல்வர் எஸ்.எம். ரஞ்சித்,

'மாகாணசபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதே பொதுஜன பெரமுனவின் நிலைப்பாடாகும். விரைவில் கட்சித் தலைவர்கள் கூட்டமும் நடைபெறவுள்ளது. தேர்தல் நடத்தப்படக்கூடாது என்று ஜனாதிபதியோ, பிரதமரோ அல்லது எமது கட்சியின் தேசிய அமைப்பாளரோ அறிக்கை எதனையும் விடுக்கவில்லை' என்றார்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அமைச்சர் சரத் வீரசேகர,

'ஒரே நாடு, ஒரே சட்டமெனில் நாட்டில் 9 மாகாணங்களில் 9 சட்டங்கள் இருக்க முடியாது. அந்தவகையில் மாகாணசபை முறைமையை நாம் நிராகரிக்கின்றோம். இது தொடர்பான முடிவை அரசாங்கம் எடுக்கும் என நம்புகின்றேன். புதிய அரசமைப்பு இயற்றப்பட்டு வருகின்றது. அது வரும்வரை மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படக்கூடாது என்ற நிலைப்பாட்டிலேயே நான் இருக்கின்றேன்.' என்றார்.

மாகாணசபை முறைமை குறித்து கருத்து வெளியிட்ட அரச சார்பு தேரரான முருத்தெட்டுவே ஆனந்த தேரர், 'மாகாணசபை என்பது இந்தியாவால் வழங்கப்பட்டது. இம்முறைமை வேண்டாம். எனவே, தேர்தல் நடத்தப்பட வேண்டியதில்லை. மாகாணசபை தொடர்பான சட்டம் கிழித்தெறியப்பட வேண்டும். இதையும் மீறி தேர்தல் நடத்தப்படுமானால் மக்களை அணிதிரட்டி உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.' என்றார். (ம-44)

# பூமியைச் சூடாக்கினால் பேரிடர் ஏற்பட வாய்ப்பு

## ஐங்கரநேசன் எச்சரிக்கை



யாழ்ப்பாணம்,டிசெ.28

**பெற்றோலிய எரிபொருள்களை எரித்துத் தள்ளுவதால் வளியில் குவிந்து கொண்டிருக்கும் கரிக்காபனால் பூமி சூடாகிறது.**

இது கொரோனாவை விடக் கொடும் பேரிடரை ஏற்படுத்தும் என்றும் தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் எச்சரித்துள்ளார்.

தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில், சுனாமி நினைவு நாள், திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. இதில் அவர் தெரிவித்த தாவது,

கடல்நீர் சூடாகுவதால் கடற்காற்றில் சேரும் நீராவியின் அளவு அதிகரிக்க அதிகரிக்க, புயலின் அழிப்பு சக்தியும் அதிகரித்து வருகிறது. கடல் சூடாகி கடல் நீர் விரிவடைவதாலும், பனி மலைகள் உருகி வழிவதாலும், கடல் மட்டம் உயர்ந்து கொண்டிருக்கின்றது. இவற்றால் கரையோரப் பிரதேசங்கள் அடிக்கடி புயல்களுக்கு முகம் கொடுப்பதோடு, கடல் நீரினுள் மூழ்கும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.

பனி உருகுவதால் வைரஸ்க்கள் வெளிப்பட்டு மனிதர்களைத் தாக்குகின்ற அபாயமும் ஏற்பட்டுள்ளது. இவற்றுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை கொண்டிருக்காத காரணத்தால் பெரும் கொள்ளை நோய்களுக்கு மனிதர்கள் ஆட்பட நேரிடும்.

கொரோனா நோயை இல்லாதொழிப்பதற்கு உலகின் முழு நாடுகளும் ஒன்றுபட்டுப் போராடி வருகின்றன. ஆனால், நாம் வெளியேற்றி வருகின்ற கரிக்காற்றைக் கட்டுப்படுத்தக் கோருகின்ற ஐக்கிய நாடுகள் சபையின் ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்துவதில் ஒன்றுபடத் தயாராக இல்லை.

காலநிலைப் பிறழ்வினால் ஏற்பட்டுவரும் இயற்கையின் கொடும் சீற்றங்களை எவராலும், எவற்றாலும் கட்டுப்படுத்த முடியாது. -என்றார். (க)

# பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்ட நிதியை முகாமைத்துவம் செய்யப் பணிப்பு

கொழும்பு,டிசெ.28

வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியை, உரிய வகையில் முகாமைத்துவம் செய்யுமாறு நிதி அமைச்சு, அனைத்து அரச நிறுவனங்களையும் வலியுறுத்தியுள்ளது.

நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிகலவின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்ட சுற்றுநிருபத்தில் இந்த விடயம் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

தற்போதைய நிலையில் நாடாளுமன்றத்தின் அனுமதியின்றி வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியை விடவும் மேலதிகமாக நிதியை ஒதுக்க முடியாது என்று நிதி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதனால் ஒதுக்கப்பட்டுள்ள நிதியை சிறந்த முறையில் முகாமைத்துவம் செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது.


வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளைக் கவனத்தில் கொள்ளாது, மேலதிகமாக நிதி செலவிடப்படுமாயின் அதற்கான முழுமையான பொறுப்பை அந்தந்த நிறுவனங்களே ஏற்க வேண்டும் எனவும் நிதி அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. (க-இ)

# போராட்டங்களால் இன்னொரு கொத்தணி?

கொழும்பு,டிசெ.28

போராட்டங்களை நடத்துவதன் மூலம், கொரோனா கொத்தணி உருவாக வாய்ப்புள்ளது. அதனால் அந்தப் பிரதேசத்தைத் தனிமைப்படுத்த நேரிடும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண எச்சரித்துள்ளார்.

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டால், அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். எனவே போராட்ட இடங்களில் மக்களை ஒன்றுகூட்டுவது தவிர்க்கப்பட வேண்டும். சுகாதார பாதுகாப்புக்களைக் கடைப்பிடியுங்கள். இதனால் இன்னொரு கொத்தணி உருவா வாய்ப்பளிக்க வேண்டாம் என்றும் அவர் மக்களைக் கேட்டுள்ளார். (க-இ)



# மருத்துவர், தாதியர்களாலேயே கொரோனாத் தொற்றுப் பரவல்

## சிற்றூழியர்கள் குற்றச்சாட்டு

திருமலை,டிசெ.28

மருத்துவ நிபுணர்கள், மருத்துவர்கள் மற்றும் தாதிய உத்தியோகத்தர்கள் வெளிவட்டங்களுக்குச் சென்று வருவதாலேயே தொற்றுப் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று திருகோணமலை பொது மருத்துவமனை சிற்றூழியர்கள் தெரிவித்துள்ளனர்.

திருகோணமலை பொது மருத்துவமனையில் கடமையாற்றிவரும் மருத்துவ நிபுணர்கள் வாரத்துக்கு ஒருமுறை கொழும்பு, கம்பஹா மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளுக்குச் சென்று வருகின்றனர். இவர்களுக்கு பி.சி.ஆர் பரிசோதனைகள் மற்றும் அன்டிஜென் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதில்லை என்றும் அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

திருகோணமலை பொது மருத்துவமனையில் கடமையாற்றி வந்த இரண்டு மருத்துவர்கள் மற்றும் மூதூர் மருத்துவமனையில் குடும்பநல உத்தியோகத்தர் ஆகியோருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவர்கள் வெளியிடங்களுக்குச் சென்று வந்தனர் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இதனால் திருகோணமலை மக்களுக்கு தொற்றுப் பரவும் அபாயம் அதிகளவில் ஏற்படக்கூடிய வாய்ப்புள்ளது என்று சமூக ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர். (க-இ)

# வீதி விபத்துக்கள் குறைவடைந்தன

கொழும்பு,டிசெ.28

விபத்துக்களில் சிக்கி கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர்களின் எண்ணிக்கை இந்த வருடம் 40 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது.

கடந்த வருடங்களில் ஒரு இலட்சம் பேர் வரையில் விபத்தில் சிக்கி கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தனர். எனினும் இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 66 ஆயிரம் பேர் வரையே சிகிச்சைகளுக்குச் சேர்க்கப்பட்டனர்.

கொரோனா வைரஸ் காரணமாக ஊரடங்கு, நடமாட்டக் கட்டுப்பாடு என்பன விதிக்கப்பட்டமை காரணமாகவே விபத்துக்குள்ளாவோரின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது.

வருடாந்தம் 20 வீதமானோர் வாகன விபத்துகளிலும், எஞ்சிய 80 வீதமானோர் வேறு விபத்துக்களாலும் பாதிக்கப்படுகின்றனர்.

இந்த வருடத்தில் வாகன விபத்துக்களின் காரணமாக குறைந்த எண்ணிக்கையிலானோரே சிகிச்சை பெற்றுள்ளனர் என்று மருத்துவமனைத் தரப்பு தெரிவித்துள்ளது. (க-இ)

# மதில் விழுந்து சிறுவன் சாவு

மட்டக்களப்பு,டிசெ.28

மதில் விழுந்து சிறுவன் ஒருவர் உயிரிழந்துள்ள சம்பவம் கோறளைப்பற்று மத்திய பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள அறபாநகர் கிராமத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது என வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தனஞ்சய பெரமுன தெரிவித்தார். அந்த சிறுவன் எதிர்வீட்டு மதில் சுவரைப் பிடித்து ஏறுவதற்கு முயற்சித்த போது மதில் சிறுவன் மேல் விழுந்துள்ளது. இதையடுத்து சிறுவனை மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார். வாழைச்சேனை நாசீவந்தீவு முருகன் ஆலய வீதியைச் சேர்ந்த கோபால் பிரேமசாந் என்ற (வயது 13) சிறுவனே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார் என வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர். (வ-இ)

# பெண்களை இலக்கு வைக்கும் குழுவினர்

## பொலிஸார் எச்சரிக்கை

கொழும்பு,டிசெ.28

நாட்டின் பல பகுதிகளில் தங்கச் சங்கிலி கொள்ளையடிக்கும் புதிய குழுவினர் தொடர்பில் அவதானமாக இருக்குமாறு பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

பெண்களை இலக்கு வைத்து மாலை நேரங்களில் கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என்று பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

எனவே மாலை நேரங்களில் தங்க நகை அணிந்து செல்லும் பெண்கள் அவதானமாகச் செயற்பட வேண்டும்.

மோட்டார் சைக்கிளில் வரும் மர்ம நபர்கள் விலாசம் கேட்பது போன்று நடித்து சங்கிலிகளைப் பறித்து செல்கின்றனர். தனிமையாக வீதிகளில் நடந்து செல்லும் பெண்கள் தங்க நகைகளை அணிந்து செல்வதைத் தவிர்ப்பது நல்லது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)

# வெதுப்பக உற்பத்திகளின் விலை அதிகரிக்கலாம்!!!

கொழும்பு, டிசெ. 28

**வெதுப்பக உணவு உற்பத்திகளுக்கு பயன்படுத்தப்படும் மூலப் பொருள்களின் விலை அதிகரித்துள்ளது. இதனையடுத்து அடுத்த ஆண்டிலிருந்து வெதுப்பக உற்பத்திப் பொருள்களின் விலைகளும் அதிகரிக்கும்.**



இவ்வாறு வெதுப்பக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்தன கூறியுள்ளார்.

வெண்ணெய்க்கு அறவிடப்பட்டு வந்த 200 ரூபா வரி 600 ரூபாவாக அதிகரிக்கப்பட்டது. இதற்காக வழங்கப்பட்ட நிவாரண காலம் இந்த மாதத்துடன் முடிவடைகின்றது. இதனால், வெதுப்பக உணவுகளின் விலை அதிகரிப்பை புதிய ஆண்டில் எதிர்பார்க்க முடியும் எனவும் என்.கே.ஜயவர்தன குறிப்பிட்டுள்ளார். (ஒ.இ)

## தனிமைப்படுத்தலை நீடிக்கக் கோரிக்கை

கொழும்பு,டிசெ.28

கொரோனாத் தொற்றின் மூன்றாம் அலையிலிருந்து மீண்டெழுவதற்காக, குறைந்தது 3 வாரங்களுக்காவது நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கோரிக்கை விடப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான ஹர்ஷன ராஜகருணா இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

ஆரம்பத்திலேயே கம்பஹா மாவட்டத்தை முடக்கம் செய்திருந்தால், நாடு முழுவதிலும் தொற்றுப் பரவாமல் தடுத்திருந்திருக்கலாம். ஆனால் அரசு அதனைச் செய்யவில்லை. அதனாலேயே இந்த அனர்த்தம் நேரிட்டுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (க-இ)

## வெள்ளவத்தைக் கடலில் யாழ்.பெண்ணின் சடலம்

கொழும்பு,டிசெ.28

கொழும்பு - வெள்ளவத்தைக் கடலில் மிதந்து கொண்டிருந்த நிலையில் பெண்ணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

26 வயதான பெண்ணே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். பெண்ணின் மரணத்துக்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை.

இவர் யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் பகுதியைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை வெள்ளவத்தை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (க-இ)

## பி.சி.ஆர் சோதனைக்கு ஒத்துழைப்பு வழங்குக

*பொலிஸ் ஊடகப் பேச்சாளர் வேண்டுகோள்*

கொழும்பு, டிசெ. 28

தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தனிமைப்படுத்தல் விதிமுறைகளை, கட்டுப்பாடுகளைப் பின்பற்றவேண்டும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளைச் சேர்ந்த மக்கள் அந்தப் பகுதிகளில் இருந்து வெளியே செல்வதற்கு அனுமதி வழங்கப்படவில்லை.

சில பகுதிகளில் உள்ளவர்கள் பி.சி.ஆர் சோதனைகளை மேற்கொள்வதற்கு அதிகாரிகளுக்கு ஒத்துழைப்பு வழங்க மறுக்கின்றனர்.

சுகாதார அதிகாரிகளின் வேண்டுகோள்களை மறுக்கின்ற நபர்களைக் கைதுசெய்து தனிமைப்படுத்தல் விதிமுறை களின் கீழ் நடவடிக்கை எடுக்கலாம். இவ்வாறு அட்டுலுக உட்பட பல பகுதிகளில் தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறிய பலருக்கு எதிராக நடவடிக்கைகள் எடுத்துள்ளோம் என்றார். (ப)

**கூறுவிலைகோரல்**
**தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்மன் ஆலய இராஜகோபுர வேலை**

எமது ஆலய இராஜகோபுர திருப்பணி வேலைகளுக்கான கூறுவிலைகள் சைவ மகா சபையினரால் கோரப்படுகின்றன. தாங்கள் ஆலயத்திற்கு நேரடியாக 29.12.2020 - 03.01.2021 திகதி வரை வருகை தந்து வேலை தொடர்பான விபரத்தினைக் கேட்டறிந்து கூறுவிலைப்படிவத்தினைப் பூரணப்படுத்தி 11.01.2021 ஆம் திகதி மாலை 5.00 மணிக்கு முன்னர் ஆலயத்திற்கு கிடைக் கக்கூடியவாறு பதிவுஅஞ்சல் மூலம் செயலாளர் தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்மன் ஆலயம் சைவ மகா சபை நாரந்தனை வடக்கு, ஊர்காவற்றுறை எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப் படவேண்டும்

குறிப்பு
*. பதிவு பெற்ற ஒப்பந்தகாரர்ாக இருத்தல் வேண்டும்
*. ஆலய கட்டுமான வேலைகளில் முன்னனுபவம் இருத்தல் வேண்டும்.

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள்
077 778 0479
077 471 1466
077 873 7338
077 113 0553

திரு.சி.தனபாலன்
செயலாளர்,
தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்மன் ஆலயம்,
சைவ மகா சபை
நாரந்தனை வடக்கு,
ஊர்காவற்றுறை

## தனிமைப்படுத்தல் மீறல் 1,700 பேருக்கு வழக்கு

கொழும்பு,டிசெ.28

தனிமைப்படுத்தல் சட்டவிதிகளுக்குப் புறம்பாக செயற்பட்ட ஆயிரத்து 700 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளரும், பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இதேவேளை கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்தும் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக சுகாதாரப் பிரிவினருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

எனவே சட்டவிதிகளுக்கு புறம்பாகச் செயற்படும் நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)

## முருங்கைக்காய் விலை அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.28

யாழ்ப்பாணக் குடாநாட்டில் முருங்கைக்காயின் விலை திடீரென அதிகரித்துள்ளது. கடந்த வாரம் ஒரு கிலோ 200 ரூபாவாக விற்கப்பட்ட முருங்கைக்காய் தற்போது சந்தைகளில் கிலோ 800 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

அண்மையில் பெய்த மழை காரணமாக முருங்கை மரங்கள் பூக்கும் தன்மையை இழந்துள்ளன.

இதனால் முருங்கைக் காய்க்கு பற்றாக்குறையும், விலை அதிகரிப்பும் ஏற்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது. (ஐ-17)

## உலகநாடுகளால் இலங்கை தனிமைப்படுத்தப்படலாம்

### இம்தியாஸ் எச்சரிக்கை

கொழும்பு, டிசெ.28

கொரோனாவால் உயிரிழந்தவர்களின் உடல்களை தகனம் செய்வது என்ற அரசாங்கத்தின் பிடிவாதமான நிலைப்பாட்டால் உலக நாடுகளில் இருந்து இலங்கை தனிமைப்படுத்தப்படலாம் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் எச்சரித்துள்ளார்.

உடல்களை அகற்றுவதை உலக சுகாதார ஸ்தாபனத்தின் வழிகாட்டுதல்களின் அடிப்படையிலோ அல்லது விஞ்ஞான ரீதியிலான அடிப்படையிலேயோ அரசாங்கம் முன்னெடுத்தால் அதை நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராகவுள்ளோம் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (வ-இ)

## மரண அறிவித்தல்

தோற்றம் 26 . 10 . 1961



மறைவு 27 . 12 . 2020

### திரு. ஜெராட் ஜோசப்

இராஜேந்திரா வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு.ஜெராட் ஜோசப் அவர்கள் 27.12.2020 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் சாந்தினிதேவி (ஆசிரியை, கொழும்புத்துறை சென் ஜோசப் வித்தியாலயம்) அவர்களின் அன்புக் கணவரும், பேள் தர்மிக்கா (மாணவி HFC), ஜோய் பிரவீன் (மாணவன் SPC) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜோசப், புஸ்பம் ஆகியோரின் அன்பு மகனும், நடேசு எலிசபெத் ஆகியோரின் அன்பு மருமகனும், மகேந்திரன், ரஞ்சினி ஆகியோரின் சகோதரரும், சோழன், சுந்தர், அருள், காலஞ்சென்ற சுகிர்தம் மற்றும் சத்தியதேவி, ராஜன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க வழிபாடு 29.12.2020 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
திருமதி சாந்தினிதேவி ஜெராட்
(மனைவி)

தொ.இல.076 639 9012

# மஹர சிறைச்சாலை துப்பாக்கிச் சூடு; நீதியை நிலைநாட்டுவதில் இடையூறு

## சட்டத்தரணி சேனக பெரேரா விசனம்

**கொழும்பு, டிசெ. 28**

**மஹர சிறைச்சாலை துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்பதற்கு இடையூறை ஏற்படுத்தும் விதமான நடவடிக்கைகள் நீதிமன்றத்துக்கு உள்ளேயும், வெளியேயும் மேற்கொள்ளப்படுகின்றன என்று சிறைக் கைதிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான அமைப்பின் தலைவர் சட்டத்தரணி சேனக பெரேரா விசனம் வெளியிட்டுள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

மஹர சிறைச்சாலையில் உயிரிழந்தவர்களை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்துமாறு நாம் வலியுறுத்தினோம். இதுவரையில் பிரேத பரிசோதனை முன்னெடுக்கப்பட்ட எட்டுப் பேரும் துப்பாக்கிச்சூட்டின் விளைவாகவே உயிரிழந்திருக்கிறார்கள். எனினும் நீதிமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் இந்தச் சம்பவத்துக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்பதற்கு எதிராகப் பல்வேறு இடையூறுகள் ஏற்படுத்தப்படுகின்றன. வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதும் அரசின் சார்பில் முன்னிலையான சட்டமா அதிபரின் பிரதிநிதி, 'பாதிக்கப்பட்டவர்களின் சார்பில் முன்னிலையாவதற்கு என்ன உரிமை இருக்கின்றது?' என்று கேள்வி எழுப்புகின்றார். அவர் இவ்வாறு கேள்வி எழுப்புவது மிகவும் கவலைக்குரிய விடயம் என்றார். (ப)

---

# புயலால் பாதித்தோருக்கு உணவுப் பொருள்கள்

சாவகச்சேரி,டிசெ.28

தென்மராட்சி பிரதேசத்தில் புரேவிப் புயல் மற்றும் பெருமழையால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு பிரதேச செயலகத்தால் உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

பிரதேசத்தில் வெள்ளத்தால் ஆயிரத்து 800 குடும்பங்கள் பாதிக்கப்பட்டன. இவர்களுக்கான உலர் உணவுப் பொருள்களை மாவட்டச் செயலகம், வேள்ட் விஷன் நிறுவனம் , சாவகச்சேரி லயன்ஸ் கழகம் , மற்றும் வர்த்தக நிறுவனங்கள் வழங்கியிருந்தன. (ஐ-9)

---



# நத்தார் பண்டிகையை முன்னிட்டு அன்பளிப்பு

வவுனியா,டிசெ.28

நத்தார் பண்டிகையை முன்னிட்டு வசந்தபுரம் மீள் குடியேற்றக் கிராமத்திலுள்ள புனித யாகப்பர் தேவாலயத்தைச் சேர்ந்த மாணவர்கள் மற்றும் தாய்மாருக்கு ரிஷி தொண்டு நாதன் சுவாமிகளால் அன்பளிப்புப் பொருள்கள் வழங்கப்பட்டன. அங்கு வசிக்கும் வயதில் கூடிய 98 வயதான மூதாட்டி ஒருவர் இந்த அன்பளிப்புகளை வழங்கியிருந்தார். (ச)

---



அமரர் மார்க்கண்டு யோகவதி அவர்களின் 3 ஆம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி, தாய்த்தமிழ் பேரவையின் சர்வதேச ஆலோசகர் கந்தப்பிள்ளை திலீபனின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு குரவில் கிராமத்தில் பதினைந்து வயோதிபர்களுக்கான உலர் உணவுப்பொருள்கள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை வழங்கப்பட்டன. (ரி5-222)



புரேவி புயலால் பாதிக்கப்பட்ட இருபாலை தெற்கு பாடசாலையில் கல்வி கற்கும் 80 மாணவர்களுக்கு, இருபாலை தெற்கு கிராம அபிவிருத்திச் சங்க பொது மண்டபத்தில் சங்கத்தின் தலைவர் பா. பிரதீபன் தலைமையில் கற்றல் உபகரணங்கள் கடந்த வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டன.

---

# பளையில் தனிமையிலிருந்த 56 பேருக்கும் தொற்றில்லை

யாழ்ப்பாணம், டிசெ.28

மருதனார்மடத்தில் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நபருடன் தொடர்புகளைப் பேணிய பளையைச் சேர்ந்த 56 பேரில் எவருக்கும் தொற்று ஏற்படவில்லை என முடிவுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

பச்சிலைப்பள்ளி புதுக்காட்டுப் பகுதியில் கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் இடம்பெற்ற வீதி விபத்தில் 56 வயதுடைய நபர் ஒருவர் உயிரிழந்தார்.

அவருடைய மரணச் சடங்கில் மருதனார் மடத்தில் தொற்று உறுதி செய்யப்பட்ட நபர் கலந்து கொண்டிருந்தார். தொற்று உறுதிசெய்யப்படுவதற்கு முதல் நாள் அவர் அங்கு சென்றிருந்தார்.

இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட சுகாதார அதிகாரிகள் அவருடன் தொடர்புகளைப் பேணிய 56 பேரைத் தனிமைப்படுத்தினர்.

அவர்களுக்கான பி.சி.ஆர் பரிசோதனைகள் கடந்த இரு தினங்களுக்கு முன்னர் இடம்பெற்றன.

இதில் சுகாதாரத் துறையைச் சேர்ந்தஊழியர்களும் உள்ளடங்கியிருந்தனர். நேற்றுமுன்தினம் கிடைக்கப்பெற்ற முடிவுகளின் அடிப்படையில் எவருக்கும் தொற்று ஏற்படவில்லை என்று உறுதிப்படுத்தப்பட்டது. (பு-6)

---

# 539 இலங்கையர் தாயகம் வருகை

கொழும்பு, டிசெ.28

கொரோனாப் பரவலால் நாடு திரும்ப முடியாது வெளிநாடுகளில் சிக்கியிருந்த 539 இலங்கையர்கள், கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர். (வ-இ)

---

## யாழ்.குடாநாட்டில்

# 2000 ஹெக்ரேயரில் வெங்காயச் செய்கை

யாழ்ப்பாணம்,டிசெ.28

யாழ்ப்பாணக் குடாநாட்டில் பெரும்போகத்துக்கான சின்ன வெங்காயச் செய்கை 2 ஆயிரம் ஹெக்ரேயர் நிலப்பரப்பில் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது என்று மாவட்ட விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கோப்பாய், நீர்வேலி, அச்சுவேலி, இடைக்காடு, ஏழாலை, ஊரெழு, புன்னாலைக்கட்டுவன், உரும்பிராய் மற்றும் வலிகாமம், வடமராட்சி போன்ற பகுதிகளில் இந்த சின்ன வெங்காய செய்கை பரவலாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கூடுதலான விவசாயிகள் விதை வெங்காயங்களை



நடுகை செய்தும் வருகின்றனர். அத்துடன்சிலர்உண்மை விதை வெங்காயங்களை நாற்றுமேடை அமைத்து அதன் மூலம் வெங்காய நாற்றுக்களை நடுகை செய்தும் வருகின்றனர். குடாநாட்டில்தற்போது சின்னவெங்காயத்துக்கு பற்றாக்குறை நிலவி வருவதோடு அவற்றின் விலையும் அதிகரித்து காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-17)

---

# மாணவர்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரிப்பு

## யுனிசெப் தகவல்

கொழும்பு, டிசெ.28

இலங்கையில் பாடசாலைகள் மூடப்பட்டுள்ளதால் மாணவர்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்கள் வழக்கத்தைவிட 40 வீதம் அதிகரித்துள்ளன என யுனிசெப் அமைப்பு தெரிவித்துள்ளது. தொலைதூரக் கல்வி முறையால் விலக்கமளித்தல் மற்றும் கலந்துரையாடும் சந்தர்ப்பம் இல்லாமையும் சில மாணவர்களுக்கு இணையத்தள வசதி இல்லாமையும் வன்முறைகள் அதிகரிப்புக்குக் காரணம் என்றும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. அத்துடன், பாடசாலை போசாக்கு வேலைத்திட்டங்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாலும் மாணவர்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்துள்ளன எனவும் யுனிசெப் சுட்டிக்காட்டியுள்ளது. (வ-இ)



## இன்றைய நாள்

**மேடம்:** மாற்று கருத்துடையோர் மனம் மாறி வெள்ளைக்கொடி பிடிப்பர். பதவி உயர்வு பெறுவது பற்றிய தகவல் உங்களை வந்து சேரும். சக ஊழியர்களால் ஏற்பட்ட மனக்குழப்பம் விலகும் நாள். இளைஞர்களின் புகழ் அதிகரிக்கும்.

**இடபம்:** அலுவலகத்தில் உங்களுக்கு சாதகமான சூழ்நிலை உண்டாகும்.மனதிலுள்ள தேவையற்ற பயங்களைப் புறந்தள்ளிவிடுங்கள்.விரயங்கள்சுபமாக மாறும் நாள். ஓய்வு உடல்நலம் பாதுகாக்கும்.

**மிதுனம்:** குடியிருக்கும் வீட்டைப் புதுப்பிக்க ஆவல் அதிகரிக்கும்.திடீர் பயணங்கள் இருக்கும். பெண்களுக்கு தாய் வீட்டி லி ருந்து எதிர்பாராத உதவிகள் கிடைக்கும். நிதி உதவி கிடைக்கும்.

**கடகம்:** அரசாங்க விஷயங்கள் எதிர்பார்த்ததை விட சற்று தாமதமாகும் அனுபவசாலிகளின் ஆலோசனைகளை கேட்டு நடப்பது நலம் தரும். புதிதாக அறிமுகமாகுபவர்களிடம் அதிக நெருக்கம் வேண்டாம்.

**சிம்மம்:** பெண்களுக்கு நீண்ட நாளாக இருந்து வந்த உடல் உபாதைகள் நீங்கும். வேலைக்காக காத்திருந்தவர்களுக்கு நல்ல வேலையும், சம்பளமும் அமையும். சிலர் அயல்நாடு செல்வீர்கள்.

**கன்னி:** குடும்பத்தில் ஒருவருக்குத் திருமணம் சிறப்பாக முடியும்.உங்களின் அறிவாற்றலை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும்.சகோதர, சகோதரிகளின் மூலம் அரவணைப்பு அதிகரிக்கும்.

**துலாம்:** நகைச்சுவை என்ற பெயரில் யாரையும் புண்படுத்தாதீர்கள்.உங்களின் செய்கைகள் தவறாக வாய்ப்புள்ளது. புது முயற்சி வேண்டாம். அலுவலகத்தில் மரியாதை கூடும்.

**விருச்சிகம்:** நீங்கள் ரசித்து மகிழத்தக்க நிகழ்ச்சி ஒன்று இன்று நடைபெறும். மனக்குழப்பங்கள் அதிகரிக்கும். பராமரிப்புச் செலவுகள் ஏற்படும்.வீட்டில் உள்ள ஒருவருக்கு சுபச்செய்தி வந்து சேரும்.

**தனுசு:** சவாலான விஷயங்களை இன்று கையில் எடுக்க வேண்டாம்.யாருக்கும் கடன், நகை வாங்கித் தருவதில் ஈடுபட வேண்டாம். பணியிடத்தில் ஏற்படும் சிறு இடர்பாடுகளை சமாளிப்பீர்கள்.

**மகரம்:** சகிப்புத் தன்மை தேவைப்படும். எதிரிகள் நகர்வார்கள்.ஆபரணம் வாங்குவீர்கள். தாயாரின் உடல் நிலை சீராகும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். உங்களின் வரவு உயரும்.

**கும்பம்:** எது செய்வதாக இருந்தாலும் அதிக முயற்சி தேவைப்படும் நாள்.நட்பு வட்டம் விரிவடையும். தாயின் நாட்பட்ட நோய் அகலும்.உங்களின் முயற்சி பலன் தரும்.

**மீனம்:** தொழிலில் செல்வாக்குமிக்க ஒருவரின் சந்திப்பு கிடைக்கும் நாள்.நல்ல விபயங்கள்நடைபெறும்.வெளிப்படையாக பேச வேண்டாம் சிறு பிரச்சினைகளை தைரியமாகஎதிர்கொண்டு வெல்வீர்கள்.

# கொரோனாத் தொற்று பரவல் உரிய விசாரணைகள் தேவை

## கொழும்பு பேராயர் வலியுறுத்து



கொழும்பு, டிசெ.28

கொரோனா வைரஸ் எவ்வாறு உருவானது என்பது தொடர்பான உரிய விசாரணைகள் இடம்பெற வேண்டும் என கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை வலியுறுத்தியுள்ளார்.

கந்தானை சென் செபஸ்டியன் தேவாலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற கிறிஸ்மஸ் ஆராதனையின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் உலகலாவிய தொற்று தானாக உருவானது என கருதமுடியாது. அதிகாரத்தில் உள்ளவர்கள் சூழலை அழிப்பதும் மோசமான வறுமையும் இதில் கவனிக்கப்பட வேண்டியவை. கொரோனா வறிய மக்களை மோசமாகப் பாதித்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (வ-இ)



# சைக்கிள் கையளிப்பு

வவுனியா,டிசெ.28

வவுனியா கோதண்டர் நொச்சிக்குளம் அ.த.க பாடசாலையில் தரம் 9 இல் கல்வி பயிலும் தி. அபிராமி எனும் மாணவிக்கு சைக்கிள் ஒன்று கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வு வவுனியா மாவட்ட சமூக சேவை திணைக்களத்தில் நடைபெற்றது. பாடசாலை அதிபரின் வேண்டுகோளுக்கு அமையவெளிச் சம் அறக்கட்டளை ஊடாக நீம் நிறுவனம் சைக்கிளைக் கையளித்திருந்தது. (ற-222)

# துப்பாக்கிச் சூட்டிலேயே கைதிகள் எண்மரும் பலி

கொழும்பு, டிசெ.28

மஹர சிறைச்சாலைக் கலவரத்தில் உயிரிழந்த எட்டு கைதிகளும் துப்பாக்கிச் சூட்டிலேயே உயிரிழந்துள்ளனர் என உடற்கூற்றுப்பரிசோதனையில் உறுதிசெய்யப்பட்டுள்ளது.

ஆங்கில ஊடகமொன்றுக்கு கருத்துத் தெரிவித்தபோது பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோகண இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

மஹர சிறைச்சாலை கலவரத்தில் உயிரிழந்த 8 பேரின் உடல்களும் உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அவர்கள் துப்பாக்கிச் சூட்டு காயங்கள் காரணமாகவே உயிரிழந்தனர் என்பது உறுதியாகியுள்ளது. கலவரம் தொடர்பாக கடந்த வியாழக்கிழமை வரை காயமடைந்த கைதிகள் உட்பட 726 பேரிடம் வாக்குமூலங்கள் பெறப்பட்டுள்ளன- என்றார். (வ-இ)

# கொள்ளையிடப்பட்டது வர்த்தகரின் மோதிரம்!

கோப்பாய், டிசெ.28

வர்த்தக நிலையம் ஒன்றுக்குள் புகுந்த திருடர்கள் வர்த்தகரின் கழுத்தில் வாளை வைத்து அவர் அணிந்திருந்த மூன்று பவுண் தங்க மோதிரத்தை அபகரித்துத் தப்பிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் கோப்பாய் பூதர்மடம் பகுதியில் கடந்த வியாழக்கிழமை இரவு 8 மணியளவில் இடம்பெற்றது. இது தொடர்பில் கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற-17)

# அன்டிஜென் சோதனையில் 41 பேருக்கு தொற்று உறுதி

கொழும்பு, டிசெ.28

மேல் மாகாணத்திலிருந்து வெளியேறும் பயணிகள் தொடர்பில் 11 இடங்களில் மேற்கொள்ளப்பட்ட ரெப்பிட் அன்டிஜென் சோதனையில், இதுவரை 41 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. இவர்களில் பாடசாலை மாணவரும் உள்ளடங்குகிறார் எனவும் இந்த சோதனை நடவடிக்கை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (வ-இ)

# பாதாளக் குழுக்கள் மீது உயர்ந்தபட்ச தண்டனை

## எச்சரிக்கிறார் பாதுகாப்புச் செயலாளர்

கொழும்பு, டிசெ.28

பாதாள உலக நடவடிக்கை களில் தொடர்ந்தும் ஈடுபடுவர்கள்மீது உயர்ந்தபட்ச சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பாதுகாப்புச் செயலாளர் மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன எச்சரித்துள்ளார்.

இதேவேளை நாட்டில் சட்டவிரோத போதைப்பொருள் வலையமைப்பை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் அடுத்த ஆண்டில் மேலும் பலப்படுத்தப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரி வித்ததாவது:

சட்டவிரோத போதைப்பொருள்கள் கைப்பற்றப்படுவதால் சமீபத்தில் போதைப்பொருள்களின் இருப்பு குறைந்து வருகின்றது. இதன் காரணமாக அவற்றின் விலைகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. பாதாள உலக மற்றும் சட்டவிரோத போதைப்பொருள் கொடுக்கல் வாங்கல்கள் அனைத்தும் ஒரே குழுக்களால் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. போதைப்பொருள் மூலம் சட்டவிரோதமாக சம்பாதிக்கப்பட்ட 59 மில்லியன் ரூபா கைப்பற்றப்பட்டுள்ளது- என்றார். (ற-இ)

# தடுப்பூசியை எடுத்துவரும் நடவடிக்கை முன்னெடுப்பு

### ஜனாதிபதி ஆலோசகர் லலித் வீரதுங்க தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.28
கொரோனாத் தடுப்பூசியை நாட்டுக்கு எடுத்து வருவது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என ஜனாதிபதி ஆலோசகர் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார்.

கொரோனாத் தடுப்பூசியை நாட்டுக்கு கொண்டுவருவது தொடர்பான நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்கான பொறுப்பு அவரிடம் அண்மையில் வழங்கப்பட்டது.

குறிப்பாக முழுமையான ஆய்வுக்குப் பின்னர் தடுப்பூசிகளைக் கொண்டுவர உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுகாதார அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துமாறும் அவருக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டது.

இந்நிலையில் இன்று டிசெம்பர் 28 ஆம் திகதி திங்கட்கிழமை அடுத்தகட்ட விவாதங்கள் நடைபெறவுள்ளன எனவும் எதிர்வரும் இரண்டு வாரங்களில் இது தொடர்பில் பதிலை வழங்க முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (வ-இ)



## மண்டல பூஜை

வவுனியா, டிசெ. 28
வவுனியாவில் சபரிவாசன் தீர்த்த யாத்திரைக் குழுவின் மண்டல பூஜை வவுனியா உக்குளாங்குளம் ரகுபாக்கத்தில் நேற்றுமுன்தினம் இரவு சமூக இடைவெளி மற்றும் சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடித்து இடம்பெற்றது.

இந்தப் பூஜையில் ஐயப்பனுக்கு விசேட அபிஷேக ஆராதனைகளும், தீபாராதனைகளும் இடம்பெற்றமையுடன் ஆனந்தமிகு ஐயப்ப பஜனையும் இடம்பெற்றிருந்தது. இதில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த குருசாமிகள், ஐயப்ப சாமிகள், அடியார்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

சபரிவாசன் தீர்த்த யாத்திரைக் குழுவால் உபயகாரர்கள் மற்றும் யாத்திரைக்குழுவின் வளர்ச்சிக்குப் பங்காற்றியவர்களை கௌரவிக்கும் முகமாக நினைவுச் சின்னங்களும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-110)

## 25 மில்லி. தடுப்பூசிக்கு ஆசிய வங்கி கடனுதவி!

கொழும்பு, டிசெ.28
கொரோனா வைரஸுக்கு 25 மில்லியன் தடுப்பூசிகளை கொள்வனவு செய்வதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியால் இலங்கைக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது.

84 மில்லியன் அமெரிக்க டொலரைக் கொண்ட முதலாவது தவணைக் கடனை வழங்குவதற்கு, நிதி அமைச்சு மற்றும் அபிவிருத்தி வங்கிக்கு இடையில் ஆவணங்கள் பரிமாறப்பட்டுள்ளன என்று நிதி அமைச்சின் செயலாளர் உறுதிப்படுத்தினார்.

தேவைக்கேற்ற வகையில் இந்தத் தொகையை 200 மில்லியன் டொலர் வரை அதிகரிக்க முடியும் எனவும் அவர் கூறினார். (ற-இ)



## படைப்புழுவின் பாதிப்பு: ஜனாதிபதி கள ஆராய்வு

கொழும்பு, டிசெ.28
படைப் புழுவால் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளின் நிலைமைகள் தொடர்பாக ஆராய்வதற்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச கள விஜயமொன்றை அனுராதபுரம், எலபத்துவ மற்றும் பஹலகம ஆகிய பகுதிகளுக்கு நேற்று முன்தினம் மேற்கொண்டார். படைப்புழுவின் தாக்கத்தின் ஊடாக, பெரும்பாலான சோளப் பயிர்ச்செய்கைகள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் விவசாயிகள் கடந்த இரண்டு வருடங்களாக பல்வேறு இன்னல்களைச் சந்தித்துள்ளனர்.

இதற்கமைய, படைப்புழுவின் தாக்கம் இந்த வருடமும் பல்வேறு மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள நிலையில் எதிர்பார்க்கப்பட்ட அறுவடை அதிக சதவீதம் வீழ்ச்சியடைந்துள்ளமையை விவசாயிகள் இதன்போது ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டுவந்தனர்.

மேலும் பயிர்ச்செய்கைகளுக்கு காட்டு யானைகளால் ஏற்படும் அச்சுறுத்தல் தொடர்பிலும் எடுத்துக் கூறியுள்ளனர். (வ-இ)

## தென்மராட்சி 'கள்' ஆஸிக்கு ஏற்றுமதி

சாவகச்சேரி,டிசெ.28
தென்மராட்சி பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியினரால் உற்பத்தி செய்யப்பட்ட போத்தலில் அடைக்கப்பட்ட கள் அவுஸ்திரேலியா நாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்படவுள்ளது.

இதன் ஆரம்ப நிகழ்வு கொத்தணித் தலைவர் க. துரைசிங்கம் தலைமையில் வடிசாலையில் இடம்பெற்றது.

நிகழ்வில் பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் கிரிஷாந்த பத்திராஜ் மற்றும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் ராமநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-9)



## 700 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் திட்டம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ.28
இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தால் 'உயர்த்தும் கரங்கள்' செயற்றிட்டத்தின்கீழ் வடக்கு - கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த புதிய கல்வியாண்டுக்கு செல்லும் 700 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன்படி மாவிட்டபுரம், பருத்தித்துறை, சகாயபுரம், அரியாலை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 130 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்ட நிலையில் புதிய கல்வியாண்டுக்காக பாடசாலை ஆரம்பிப்பதற்கு முன்னர் ஏனைய மாவட்ட மாணவர்களுக்கும் கற்றல் உபகரணங்கள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## ஆயுள்வேத மருத்துவமனையின் தேவைகளை ஆராய்ந்தார் சிசிர!

திருகோணமலை, டிசெ.28
சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயக்கொடி திருகோணமலை கப்பல் துறை ஆயுள்வேத மருத்துவமனைக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை கடந்த வெள்ளிக்கிழமை மேற்கொண்டார்.

இதன்போது கிழக்கு மாகாண சுதேச மருத்துவ அபிவிருத்தி மற்றும் மருத்துவமனைகளின் அபிவிருத்தி தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் வைத்தியசாலையையும் பார்வையிட்டு மாகாண ஆணையாளரிடம் அதன் நிறைகுறைகளைக் கேட்டறிந்து கொண்டார்.

அதன்பின்னர் கருத்து தெரிவித்த அமைச்சர், கொரோனாவை கட்டுப்படுத்துவதற்கு உகந்த நிலையில் உள்ளனவா என 37 தேசிய ஔடதங்கள் தொடர்பில் பரிசோதனைகள் நடைபெற்று வரும் நிலையில், அனைத்து ஊடகங்களும் ஒரு தயாரிப்புக்கு மாத்திரம் கவனத்தை செலுத்தி வருகின்றன. இதனை எண்ணி நான் கவலை அடைகின்றேன் எனக் கூறினார். (ற-இ)

## அதிவேக நெடுஞ்சாலையின் நிர்மாணப் பணிகள் விரைவில்!!

கொழும்பு, டிசெ.28
கடவத்தையில் இருந்து மீரிகம வரையான அதிவேக நெடுஞ்சாலையின் நிர்மாணப் பணிகள் துரிதகதியில் நிறைவு செய்யப்படும் என்று அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.



கடந்த காலங்களில் இந்த நிர்மாணப் பணிகள் மந்தகதியில் இடம்பெற்றன எனவும் இதனால் பல பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியிருந்தது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த வீதி அபிவிருத்திப் பணிகளுக்கு பொருத்தமற்ற ஒப்பந்தக்காரர்களை நியமித்தமையே வேலைத்திட்டம் தாமதமடையக் காரணமாகும்.

இந்த ஒப்பந்தக்காரர்களை நீக்கிவிட்டு அதை முழுமைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மேலும் கூறினார். (ற-இ)

உதயன் newuthayan.com

# 2021 உங்கள் ராசிக்கு எப்படி?

## ஆங்கிலப் புத்தாண்டு பலன்கள்




இன்னும் சிறிது நாள்களில் கடக்க இருக்கும் 2020 ஆம் ஆண்டின் முடிவுக்காக எம்மில் பலரும் ஆர்வ மாகக் காத்துக் கொண்டிருக்கிறோம். இந்த வருடம் போல் எப்போதும் உலக மக்கள் துயரத்தைச் சந்தித் திருக்கமாட்டார்கள். 2020ஆம் ஆண்டைக் கடக்க இருக்கும் நிலையில், வர இருக்கும் புதிய 2021 ஆம் ஆண்டைப் பற்றிய பயமும் தொற்றிக்கொண்டுள்ளது. இந்த ஆண்டாவது உலக மக்களுக்கு சுபீட்சத்தைத் தருமா? என்கிற எதிர்பார்ப்பு ஒவ்வொரு வருக்கும் அதிகமாகவே இருக்கிறது என்று கூறலாம். அவ்வகையில் வர இருக்கும் 2021ஆம் ஆண்டுக் கான பலன்கள் இங்கு தரப்படுகின்றன.

மகர ராசிக்காரர்களுக்கு வர இருக்கின்ற 2020ஆம் ஆண்டில் ஜோதிட பலன்கள் எப்படி இருக்கும்? என் பதை தான் இந்த பதிவின் மூலம் தெரிந்துகொள்ள இருக்கிறோம். உங்களுடைய ராசிக்கு சனிபகவான் சொந்த வீட்டிலேயே இருப்பார். ராசியாதிபதி சனி பக வான் ஆண்டின் தொடக்கத்தில் குருவுடன் சேர்ந்து இருந்து பின் குருபகவான் மட்டும் பெயர்ச்சி ஆவார். ராகு 5வது இடத்திலும், கேது 11வது இடத்திலும் அமர இருக்கின்றார்கள். செவ்வாய் பகவான் நான்காவது வீட்டில் இருப்பதால் குடும்பத்தில் சில குழப்பங்கள் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் உண்டு.

**குடும்பம்:** குடும்பத்தைப் பொறுத்தவரை மகர ராசிக் காரர்களுக்கு ஏற்ற இறக்கமான பலன்கள் இருக்கும். பெற்றோர்களின் உடல் நலத்தில் குறிப்பாக, தாயின் உடல்நலத்தில் பிரச்சனைகள் ஏற்படுவதற்கு வாய்ப் புகள் உண்டு. எனவே அவர்களை பத்திரமாக பார்த் துக்கொள்ளுங்கள். ஆரோக்கிய ரீதியான செலவு களை செய்வதற்கான வாய்ப்புகள் உண்டு. சனி பகவான் உங்கள் ராசியி லேயே இருப்பதால் வீடு, மனை போன்றவற்றை வாங்கும் யோகம் உண்டாகும். அப்படி வாங்கும் பொழுது ஒன்றுக்கு பலமுறை ஆலோசனை செய்து விட்டு வாங்குவது மிகவும் நல்லது.

**வியாபாரம் மற்றும் தொழில்:** தொழில் மற்றும் வியா பாரத்தில் மகர ராசிக்காரர்கள் நல்ல பலன்களைப் பெறுவார்கள். ராசியாதிபதி சனி ராசியில் அமர்ந்தி ருப்பதால் உழைப்புக்கு ஏற்ற பலன்களை உடனுக்கு டன் பெற சாத்தியக்கூறுகள் உண்டு. இந்த காலகட் டத்தில் நீங்கள் எடுக்கும் முயற்சிகளுக்கு ஏற்ப பல னும் கிடைக்கும். குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென் றால் அகலக்கால் வைக்க சிறந்த காலம் இது. தைரியமாக முடிவெடுத்து முன்னேறப் பாருங்கள். தொழில் மற்றும் வியாபார ரீதியான பயணங்கள் மேற்கொள்வதற்கான வாய்ப்புகள் கிடைத்தால், அனு கூலமான பலன்கள் கிடைக்கும். புதிய நண்பர்களின் அறிமுகமும், அவர்களால் நிறைய விஷயங்களையும் கற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் உருவாகும்.

**உத்தியோகம்:** உத்தியோகத்தில் இருக்கும் மகர ராசிக் காரர்களுக்கு ஆண்டின் தொடக்கத்தில் சுமாராக இருந்தாலும், ஏப்ரல் மாதத்துக்கு பிறகு ஓரளவுக்கு முன்னேற்றம் இருக்கும். ஒரு சிலர் சட்டவிரோத காரி யங்களில் ஈடுபடுவதற்கு வாய்ப்புகள் உண்டு என்ப தால் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அடுத்தவர்களின் பிரச்சனைகளில் மூக்கை நுழைக் காமல், நீங்கள் உண்டு, உங்கள் வேலை உண்டு என்று இருந்தால் மன நிம்மதியுடன் இருக்கலாம். இல்லையென்றால் வம்புகளில் மாட்டித் தவிப்பீர்கள்.

**பொருளாதாரம்:** பொருளாதார ரீதியான முன்னேற் றத்தில் மகர ராசிக்காரர்களுக்கு வரவுக்கு ஏற்ப செலவு களும் சமமாக வந்து சேரும். ஜனவரி மற்றும் ஒகஸ்ட் மாதங்களில் சிலருக்கு பொருளாதார நெருக்கடிகள் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் உண்டு. இந்த ஆண்டில் கடன் கொடுப்பதையும், கடன் வாங்குவதையும் எந்த அளவுக்கு குறைத்துக் கொள்கிறீர்களோ! அந்த அள வுக்கு நல்ல பலன்களையும் பெறலாம். இருப்பதை வைத்து திருப்தி அடைவதே மிகவும் நல்ல பலனைக் கொடுக்கும். ஆடம்பர செலவிற்கு முக்கி யத்துவம் கொடுத்தால் கடன் தொல்லை கழுத்தை நெரிக்கும் அளவுக்கு வளர்ந்துவிடும். பெண்களுக்கு: பெண்களைப் பொறுத்தவரை மகர ராசிக்கு யோக மான பலன்கள் உண்டு. உங்களுக்கு திடீர் அதிர்ஷ்டம் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் உண்டு. நீங்கள் மனதில் நினைத்த விஷயங்கள் நடைபெறுவதற்கான கால மிது. நீண்ட நாள் ஆசைகள் மற்றும் கனவுகள் நிறைவேறும். கணவன் மனைவிக்கிடையே நெருக் கம் அதிகரிக்கும். பிள்ளை இல்லாதவர்களுக்கு பிள்ளை வரம் கிடைக்க வாய்ப்புகள் உண்டு.

**பரிகாரம்:** இறை வழிபாடுகளில் அதிக கவனம் செலுத் தினால் நல்ல பலன்களைப் பெறலாம். செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் அம்மன் வழிபாடு செய்து வர நன்மைகள் உண்டாகும். மேலும் செவ்வாய்க்கிழமை தோறும் செவ்வாய் பகவானை தரிசித்து, அவருக்கு உரிய வஸ்திரத்தை சாற்றி வழிபட்டால் சுபச்செய்திகள் வந்து சேரும். உங்கள் ராசிப்படி ரத்த தானம் செய்து வர பாவங்கள் நீங்கி புண்ணியம் சேரும்.

# யானைப் பாதுகாப்புக்கு தேசிய தொடர்பாடல் குழு!

கொழும்பு, டிசெ.28

காட்டு யானைகளால் பொதுமக்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களை தவிர்ப்பதற்கு தேசிய தொடர்பாடல் குழுவொன்றை அமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

2016 ஆம் ஆண்டு 4 ஆயிரத்து 211 கிலோ மீற்றர் நீளமுடைய யானை வேலி அமைக்கப்பட்டது. அவை உரிய முறை யில் பராமரிக்கப்படவில்லை. யானை வேலிகளை பராமரிப்பதற்காக வருடம் ஒன்றுக்கு 86 மில்லியன் ரூபா செலவி டப்படுகின்றது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ந-இ)

# வாழ்வாதார உதவி வழங்கல்

கொடிகாமம், டிசெ.28

துலா தன்னார்வ அமைப்பால் முன்னெடுக்கப்படும் வாழ்வா தார மற்றும் சுயதொழில் மேம்பாட்டு செயற்றிட்டத்தினூ டாக சங்கானை பிரதேசத்தில் வாழ்வாதாரத்தில் பின்தங்கிய நிலையில் உள்ள தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் அண்மையில் வழங்கப்பட்டன. புலம்பெயர்ந்து லண்டனில் வசிக்கும் முருகா முத்துக்குமார சாமி மற்றும் பிரான்ஸ் நாட்டில் வசிக்கும் இராசேந்தி ரன் செல்வக்குமார் ஆகியோ ரின் நிதிப் பங்களிப்பின் மூலம் கோழிக்கூடு, நாட்டுக்கோழி கள், ஒரு மாதத்துக்குத் தேவையான உலர் உணவு பொருள்கள் மற்றும் கற்றல் உபகரணங்கள் என்பன வழங்கப்பட்டன. (ச-159)

# பொருளாதார நெருக்கடிக்குள் வானவேடிக்கை உற்பத்தியாளர்

கொழும்பு, டிசெ.28

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் மற் றும் கொரோனாப் பரவல் காரணமாக பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளோம் என்று வான வேடிக்கை உற்பத்தியாளர்கள் தெரிவிக் கின்றனர்.

அந்தவகையில் சட்ட ரீதியான, காப்பு றுதி தொடர்பான, மூலப்பொருள் பெற் றுக் கொள்ளல், சந்தைப்படுத்தல் ஆகிய பிரச்சினைகளை எதிர்நோக்கு கின்றோம் என அவர்கள் தெரிவித்த னர். (ந-இ)



மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்துக்குட்பட்ட பொருளாதாரத்தில் பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த 50 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அடங்கிய பொதி கள் செரண்டிப் சிறுவர் இல்லத்தால் கடந்த வியாழக்கிழமை வழங்கப்பட்டன. (ரி5-159)

# கொரோனாத் தொற்றை 2021 இல் ஒழிப்போம்!

## அரசு இறுமாப்பு

கொழும்பு, டிசெ.28
எதிர்வரும் ஆண்டில் கொரோனாத் தொற்றை முற்றாக ஒழிப்போம் என்று பிற உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சர் நிமல் லன்சா தெரிவித்தார்.
பாணந்துறை பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் நடந்த நிகழ்வொன்றில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.
முழு நாட்டையும் முடக்காமல் பொருளாதார சந்தர்ப்பத்துக்கு மக்களுக்கு இடமளிப்போம் என்றும் எதிர்வரும் ஜனவரி 17 ஆம் திகதிக்கு பின்னர் விமான நிலையத்தை வழமைக்கு கொண்டுவர முடியும் என்றும் அவர் தெரிவித்தார். (ந-இ)

# வெளிநாடுகளில் இலங்கையர் பாதுகாப்பு உறுதிசெய்யப்படும்!

## தினேஷ் குணவர்தன தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.28
சுமார் 40 நாடுகளில் தங்கியிருக்கும் இலங்கையர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று வெளிநாட்டு அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.
இலங்கை திரும்புவதற்கு எதிர்பார்த்துள்ளவர்களை அழைத்துவரும் நோக்கத்துடன், சம்பந்தப்பட்ட நாடுகளுடன் இராஜதந்திர பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் வெளிநாடு சென்ற இலங்கையர்களில் 52 ஆயிரம் பேர் திருப்பி அழைத்து வரப்பட்டுள்ளனர் எனவும் அவர் கூறினார். (ந-இ)

# கண்டி நிலநடுக்க அறிக்கை; இம்மாத இறுதியில் சமர்ப்பிப்பு

கண்டி, டிசெ.28
கண்டி-திகன பகுதியில் அண்மையில் ஏற்பட்ட நில அதிர்வு தொடர்பான நிபுணர் குழுவின் இடைக்கால அறிக்கை எதிர்வரும் 31 ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவுள்ளது. அறிக்கையை, சமர்ப்பிக்கத் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகத்தின் தலைவர் அநுர வல்பொல குறிப்பிட்டார்.
சுற்றாடல் அமைச்சின் செயலாளர் மற்றும் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்கவிடம் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது. (ச-இ)

# இறையாண்மையை இழக்கத் தயாரில்லை

## சரத் வீரசேகர தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 28
இலங்கையின் இறையாண்மையைப் பாதிக்கும் வகையில் சர்வதேச அமைப்புக்கள் எவற்றாலும் முன்வைக்கப்படும் பிரேரணைகளை இலங்கை ஒருபோதும் ஏற்காது. இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.
ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பில் புதிய தீர்மானம் கொண்டு வரப்படவுள்ளமை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது; புதிய பிரேரணை தொடர்பில் கவனம் செலுத்துவோம். இறையாண்மையைப் பாதிக்கும் பிரேரணையை ஆதரிக்க மாட்டோம். இலங்கை தொடர்பில் கடந்த காலங்களில் நிறைவேற்றப்பட்ட பிரேரணைகள் நாட்டின் இறையாண்மையைப் பாதிக்கும் வகையில் அமைந்திருந்தன. இதிலிருந்து வெளியேறுவோம் என்ற வாக்குறுதியை மக்களுக்கு வழங்கினோம். அதனை நிறைவேற்றினோம். கோத்தாபய ஆட்சிக்கு வந்த பின்னர் வெளிவிவகார கொள்கை திருத்தப்பட்டது.
நாட்டுக்கு எதிராக செயற்படும் சர்வதேச அமைப்புக்களிலிருந்து விலகவும் தயார் என்று ஜனாதிபதி கோத்தாபய தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். இதுவே அரசின் கொள்கையாகும், என்றார். (ஒ.இ)



# இரு தலைகளுடன் அதிசய கடலாமை

கொழும்பு,டிசெ.28
ஹிக்கடுவை திராணகம கடற்கரையில் இரண்டு தலைகளைக் கொண்ட கடல் ஆமை, பிரதேச மக்களால் அடையாளம் காணப்பட்டது.
கடல் ஆமை முட்டை பொரித்து குஞ்சுகள் வெளியாகிக் கொண்டிருந்தபோது, குஞ்சுகள் இடையில் இந்த இரட்டைத் தலை ஆமைக் குஞ்சு இருந்துள்ளது. அதற்கு ஆறு கால்கள் மற்றும் இரண்டு தலைகள் காணப்படுகின்றன. அரிய வகையான இரட்டைத் தலை ஆமைக் குஞ்சு பிரதேச மக்களால் ஹிக்கடுவை வனஜீவராசிகள் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டது. (சு-இ)

# கொரோனாவால் வயோதிபர் சாவு

கொழும்பு, டிசெ.28
நாட்டில் மேலும் ஒரு கொரோனா உயிரிழப்பு நேற்றுமுன்தினம் பதிவாகியுள்ளது. சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் இதனை உறுதிப்படுத்தியுள்ளார்.
இவ்வாறு உயிரிழந்தவர் கொழும்பு மோதர பகுதியில் உள்ள வயோதிபர் இல்லத்தைச் சேர்ந்த 67 வயதுடைய ஆண் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர் ஹோமாகம ஆதார மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் கொரோனா மற்றும் நிமோனியாவால் நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்துள்ளார்.
இந்நிலையில் இலங்கையில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 187ஆக அதிகரித்துள்ளது. (வ-இ)



## 4ஆம் கட்டமாக

# 'கிளிரெக்' அமைப்பால் மரநடுகை செயற்றிட்டம்

கொடிகாமம், டிசெ 28
'கிளிரெக்' அமைப்பின் 'பயன்தரும் மரங்கள் நடுவோம். வளம் பல பெறுவோம்' எனும் மரநடுகை செயற்றிட்டத்தின் நான்காம் கட்டம் கோரக்கன்கட்டு, ஒதியநகர் கிராமத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தலைவர் தி.பிரபாகரன் தலைமையில் நடைபெற்றது.
இத் திட்டத்தில் 25 குடும்பங்களுக்கு பயன்தரு மரக்கன்றுகள் வழங்கி நடுகை செய்யப்பட்டன. ஐக்கிய அமெரிக்காவில் புலம்பெயர்ந்து வசிக்கும் சிறீ என்பவரின் நிதிப் பங்களிப்பில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருலிங்கநாதன், கண்டாவளை பிரதேச செயலாளர் த.பிருந்தாகரன், கிளிநொச்சி மாவட்ட திட்ட மிடல் பணிப்பாளர் சிறீபாஸ்கரன், வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் திட்டமிடல் பணிப்பாளரும் 'கிளிரெக்' அமைப்பின் நிர்வாக சபை உறுப்பினருமான ச.மேகனபவன், கிளிநொச்சி மாவட்டச் செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளரும் கிளிரெக்கின் உபதலைவருமான அ.கேதீஸ்வரன் எனப் உட்பட கலந்து கொண்டனர். (ச-159)

# தப்பியோடிய தொற்றாளர் மடக்கி பிடிப்பு

கொழும்பு, டிசெ.28
சப்புகஸ்கந்த மாகொல வடக்கு, தேவாலய வீதியிலுள்ள வீடொன்றில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த கொரோனாத் தொற்றாளர் ஒருவர் அங்கிருந்து தப்பியோடிய நிலையில் அந்தப் பிரதேசத்தில் வைத்தே பொலிஸாரால் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளார்.
சிகிச்சைகளின் பின்னர் அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (வ-இ)


# கொரோனா சிகிச்சை நிலையத்தில் மருத்துவர்கள் இருவருக்கு தொற்று

பொலநறுவை, டிசெ.28
பொலநறுவை-வெலிகந்த கொரோனா விசேட சிகிச்சை மத்திய நிலையத்தின் மருத்துவர்கள் இருவர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
திருகோணமலையில் பணிபுரிந்த இருவரும், கொரோனா விசேட சிகிச்சை மத்திய நிலையத்தில் பணியாற்றுவதற்காக வெலிகந்தவுக்கு வந்திருந்த நிலையில் அவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது. பரிசோதனை முடிவுகள் நேற்று வெளியிடப்பட்ட நிலையில் அவர்களுக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. இதையடுத்து அவர்களுடன் தொடர்பிலிருந்த 10 பேர் பொலநறுவையில் உள்ள தனிமைப்படுத்தும் நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (வ-இ)

# அரசியல் கைதிகள் என அங்கீகரிக்க மறுப்பதேன்?

விவேகானந்தனூர் சதீஸ்

கொரோனா பெருந்தொற்று நெருக்கடியால் கொழுந்து விட்டு எரிகிறது சிறைக்கைதிகளது விடுதலை விவகாரம். எட்டு லட்சம் வழக்குக் கோவைகள், தேங்கிக்கிடக்கின்றன என நாடாளுமன்றில் போட்டுடைத்துள்ளார் நாட்டின் நீதி அமைச்சர். அதில் எண்ணூறு வழக்குகளாவது நாடாளுமன்றில் குந்தியிருக்கும் மக்கள் பிரதிநிதிகளினுடைய தாக இருக்கலாம். புதிதாக நீதிபதி களை நியமித்து நிலுவையில் உள்ள வழக்குகள் துரித விசாரணைக்குட்படுத்தப்படும் என்றொரு செய்தியும் வெளிப்படுத்தப் பட்டுள்ளது.





தனிப்பட்ட குற்றமிழைக்காது சோடிக்கப்பட்ட சாட்சியங்களோடு பதினெட்டு வருடங்களாக தமிழ் அரசியல் கைதிகள் தொடர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கின்றார்கள். இந்தநிலையில் சிரேஷ்ட அமைச்சர் 'சான்றாதாரங்களின்றி சந்திரகாந்தன் என்ற பிள்ளையானை ஐந்து வருடங்களாக பிணை வழங்காமல் சிறையில் அடைத்து வைத்திருந்து பழிவாங்கிவிட்டது கடந்த நல்லாட்சி அரசாங்கம்' என்று வருத்தம் தெரிவிக்கின்றார். அதனால் நாட்டில் பேருக்கொரு சட்டம் ஆளுக்கொரு நீதியாம் என்று ஜனநாயகக் குடியரசின் நாடாளுமன்றில் சூடாக வாதங்கள்.

'எண்ணாயிரம் கைதிகளை இவ்வாண்டு இறுதிக்குள் விடுவிப்போம். மரணதண்டனையை காலவரையறை செய்வோம்' எனக் கூறிய புதிய அமைச்சரின் வாக்குறுதி தற்போது ஓரளவு நிறைவேற்றப்படுகின்றது. விடுதலை செய்யப்பட இருக்கின்ற 8 ஆயிரம் கைதிகளுக்குள் தமிழ் அரசியல் கைதிகளையும் கட்டாயம் உள்வாங்குங்கள் என தமிழ் அரசியல் பிரதிநிதிகளும் தமிழ் அமைப்புகளும் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் ஏட்டிக்குப் போட்டியாக மனுக்களைக் கையளித்தார்கள். கையளித்தவற்றையெல்லாம் வாங்கிவைத்துக் கொண்ட நாட்டின் தலைவர்கள் தமிழ்க் கைதிகள் விடயத்தில் மௌனம் கடைப்பிடிக்கின்றனர். ஆனபோதும் இணை அமைச்சரவைப் பேச்சாளர் சும்மா இருக்கவில்லை "அரசியல் கைதிகளென எவருமில்லை. அப்படித் தங்களைச் சொல்லிக்கொள்ளும் பயங்கரவாத செயற்பாடுகளுடன் தொடர்புடைய கைதிகளை விடுவிப்பதற்கான யோசனை எதுவும் அரசாங்கத்திடம் இல்லை" என சங்கதியை சந்திக்குக் கொண்டு வந்தார் அவர். இதை இவரே தயாரித்து வெளியிட்டாரா அல்லது அரசாங்கத்தின் கூட்டுத் தயாரிப்பா எனப் புரியாத கடிதக் கையளிப்பாளர்கள் குழம்பிப்போய் நிற்கிறார்கள்.

விலங்கு பூட்டப்பட்ட கைகளை உயர்த்தி வீடியோ கமராவுக்குக் காட்டி மீடியாவில் இடம்பிடித்துக் கொண்டு சிறைக்கு வரும் உயர் சபையின் உறுப்பினர்கள், சிறையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளுடன் சினேகமாகக் கதைத்துப் பேசி உறவாடுகின்றார்கள். பெயரளவிலான சிறைநாள்கள் முடிவடைந்து பிணையில் விடுதலையாகும் அரசியல் பிரபலங்களிடம் 'எங்களது விடுதலைக்கும் வழி சமையுங்கள்' என வினயமுடன் கேட்டுக் கொள்வார்கள் அரசியல் கைதிகள். "ஆம். உங்களது உண்மை நிலை இப்பொழுது தானே எங்களுக்குத் தெரிகிறது. நிச்சயமாக உங்கள் விடுதலைக்காக எங்கள் குரலும் இனி ஒலிக்கும்" என்று உறுதிமொழி அளிப்பவர்கள் எல்லாம் சிறை வாயிலை கடந்ததும் அவற்றைக் காற்றில் பறக்கவிடுவதே வரலாறு. இது போதாதென்று 'சிறையிலுள்ளவர்கள் ஒன்றும் அரசியல் கைதிகள் அல்லர். அவர்கள் அனைவரும் பயங்கரவாதச் செயற்பாட்டாளர்களே" என்று அந்தர் பல்டி அடித்து தமது அரசியல் புத்தியைக் காண்பித்து விடுகிறார்கள்.

**கட்டற்ற வன்முறைகளே போராட்டத்தை தோற்றுவித்தன**

நிலம், மொழி, கலை, கலாசாரம், பண்பாடு, பழக்கவழக்கம் என தமக்கென தனித்துவமான பாரம்பரியங்களைக் கொண்டு இலங்கையின் பூர்வீகக் குடிகளில் ஒன்றாக விளங்குகிறது தமிழினம். நாடு சுதந்திரமடைவதற்கு முன்னரான காலம்தொட்டு இன்றுவரை தமிழினம் தனது அரசியல் விடுதலைக்காக போராடி வருகிறது. அடிமைத்தனங்களை பொறுத்துக்கொள்ள முடியாமல் பொறுமையிழந்த துடிப்புமிகு இளைய சமூகம் கொதித்தெழுந்து நியாயம் கேட்டது. அப்போதும் கூட செவிகொடுக்காத சிங்களப் பேரினவாத ஆட்சி அதிகாரம் அவர்களை வலிந்திழுத்து ஆயுத வழிக்குள் தள்ளியது. அதன்மூலம் முழு நாடும் போர் அழிவுகளை சந்தித்து பேரிழப்பை எதிர்கொண்டது. தமிழ் மக்களின் அரசியல் விடுதலைக்காக முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களின் போதெல்லாம் முற்போக்கு சிந்தனை கொண்ட சகோதர சிங்கள முஸ்லிம் மக்கள் பலர் இயலுமான ஒத்தாசைகளை வழங்குவதை மறுக்க முடியாது. அந்த வகையில் இரண்டாயிரத்து பத்தாம் ஆண்டுக்கு முற்பட்ட காலங்களில் அவசரகால மற்றும் பயங்கரவாதத் தடைச் சட்ட விதிமுறைகளின் கீழ் கைதுசெய்யப்பட்டு சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைவரையும் தமிழ் அரசியல் கைதிகள் எனக் குறிப்பிட முடியும்.

**புலிகளுக்கே பொதுமன்னிப்பு எனின் அரசியல் கைதிகளுக்கு இல்லையா**

அரசியல் காரணங்களுக்காகவே விடுதலைப் போராளிகள் ஆயுதங்களை ஏந்தினார்கள். அதனை அரச தரப்புகளும் ஏற்றுக்கொள்ள வேண்டி இருந்தது. ஆகவேதான் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரும் முகமாக போராளிகளுடன் அரச தரப்பு உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் என இரு தரப்பு முத்தரப்பும் பேச்சுவார்த்தைகளை நடத்தியிருந்தது. புரிந்துணர்வு ஒப்பந்தங்களிலும் உடன்படிக்கைகளிலும் கையெழுத்திட்டு அதனை ஏற்று நடைமுறைப்படுத்தியும் இருக்கிறது. ஒரு கட்டத்தில் நாட்டின் தமிழர் தாயகப் பிரதேசத்தைக் கட்டியெழுப்பும் இடைக்கால நிர்வாக ஆட்சி அதிகாரத்தைக் கூட போராளிகளிடம் ஒப்படைப்பதற்கும் அரசு தயாராகவே இருந்தது. எனினும் பேச்சில் ஈடுபட்டிருந்த இரு தரப்புகளினதும் வெளிப்படைத் தன்மையற்ற இராணுவத் தந்திரோபாய காய்நகர்த்தல்களால் முன்னெடுக்க அத்தனை பேச்சுக்களும் தொடக்கத்திலும் பாதியிலுமாக முறிந்து சரிந்து காணாமல்போனது வேறு கதை.

2009 போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதன் பின்னர் அரச படைகளிடம் சரணடைந்த 12 ஆயிரம் போராளிகளுக்கு சர்வதேச அனுசரணையுடன் புனர்வாழ்வளித்து அரசு அவர்களை சமூகத்துடன் இணைந்திருக்கின்றது என்றால் அது அரசியல் சார்ந்த போராட்ட அமைப்பின் போராளிகள் என்கின்ற உண்மையால் என்பது திண்ணம். ஆகவே அதே விடுதலைப் போராளிகள் அமைப்புடன் சம்பந்தப்பட்டவர்கள் என்கின்ற அடிப்படையில் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை தமிழ் அரசியல் கைதிகள் என்று குறிப்பிடாமல் வேறு எப்படிக் குறிப்பிட முடியும்.

சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்ற தமிழ் அரசியல் கைதிகளை அவர்களது உறவினர்கள் சென்று பார்வையிட்டு வருவதற்கான பயணச் செலவை அனைத்துலக செஞ்சிலுவைக்குழு பொறுப்பேற்று நடைமுறைப்படுத்தி வருகிறது. சர்வதேச செஞ்சிலுவைக்குழு தமிழ் அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்ற சிறைச்சாலைகளுக்கு நேரடி கள விஜயங்களை மேற்கொண்டு அவர்களது நிலைமைகளை அவதானித்து அவர்களுக்குத் தேவையான அத்தியாவசியங்களையும் கூட நிறைவேற்றி வருகிறது.

அதுமட்டுமன்றி இலங்கைக்கு வருகை தருகின்ற ஐக்கிய நாடுகளின் பிரதிநிதிகளும் நிபுணத்துவக் குழுக்களும் பன்னாட்டு விசேட வருகையாளர்களும் மனித உரிமை அமைப்புகளும் அரசியல் கைதிகளைச் சென்று பார்வையிட்டு தரவுகளை பெற்றுச்செல்கிறார்கள் என்றால் இவையெல்லாம் எதற்காக?. சர்வதேசமே தமிழ் அரசியல் கைதிகளை ஏற்றுக் கொண்டுள்ளது என்ற ஒன்றுதான் இதன் பின்னால் இருக்கின்றது என்பதை சர்வதேசம் புரிந்துகொள்ள வேண்டும்.

**நிராகரிக்கப்படுவதற்கான காரணங்கள் பலவுள்ளன**

இத்தகை பகிரங்க உண்மைகள் கண்முன்னே தெரிகின்றபோதும் நாட்டிலுள்ள சிங்கள அரசியல்வாதிகளும் அரசாங்கங்களும் தமிழ் அரசியல் கைதிகளை ஏற்றுக்கொள்ள மறுத்து வருகின்றமைக்கு காரணங்கள் இருக்கத்தான் செய்கிறன. அதாவது தமிழர்களின் அரசியல் விடுதலைக்கான போராட்ட அமைப்பின் கைதிகளை தமிழ் அரசியல் கைதிகள் என அரசாங்கம் தன் வாயால் ஒரு தடவை அங்கீகரித்துவிட்டால் அதற்குப் பிறகு அவர்களை சர்வதேச சட்ட நியதிகளுக்கமைய பிரத்தியேக உரிமை அளித்துப் பராமரிக்க வேண்டும்.

அந்த வகையில் கைது செய்யப்பட்டு 24 மணிநேரத்துக்குள் ஏதேனுமொரு நீதிமன்றில் அரசியல் கைதியை முன்நிலைப்படுத்த வேண்டும், விசாரணை என்ற பெயரில் தாக்கப்படவோ சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்படவோ முடியாது, ஒவ்வொரு சிறைச்சாலைகளிலும் அரசியல் கைதிகளுக்கென அடிப்படை வசதிகளுடன் கூடிய பாதுகாப்பான விடுதிகள் ஒதுக்கப்பட வேண்டும், வழக்கு விசாரணைகள் தாமதமின்றி நடத்தப்பட்டு நீதி வழங்கப்பட வேண்டும், தண்டனையளிக்கப்பட்ட அரசியல் கைதிகளுக்கு கடுமையான பணிகள் வழங்க முடியாது, அரசியல் கைதிகள் விரும்பும் ஏதேனும் இரண்டு பத்திரிகைகளை அவர்களுக்கு தினமும் வழங்க வேண்டும், அரசியல் கைதிகளுக்கு வாசிப்பதற்குத் தேவையான புத்தகங்கள் அனுமதிக்கப்பட வேண்டும், போஷாக்கான உணவு, மருத்துவம், உறவினர்களுடனான சந்திப்பு என்பனவற்றுக்கு சிறப்பான ஒழுங்கமைப்புப் பேணப்பட வேண்டும். இவ்வாறான பல்வேறு சட்ட நியதிகளும் உரிமைகளும் அரசியல் கைதிகளுக்கு வழங்கப்பட வேண்டும்.

இவற்றை வழங்க முடியாத அல்லது வழங்க விரும்பாத காரணத்தால்தான் இன்று அரசியல் கைதிகளின் விவகாரத்துக்குப் புதுச்சாயம் பூசப்படுகின்றது என்பதை அறிவார்ந்த சமூகம் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

வர்த்தமானிக்கு மாறாக

# கொரோனாவில் உயிரிழந்த பெண்ணின் சடலம் அடக்கம்

கொழும்பு,டிசெ.28
கொரோனாத் தொற்றால் உயிரிழந்த பெண் ஒருவரின் சடலம் வர்த்தமானிக்கு மாறாக , சட்ட மருத்துவரின் அனுமதியுடன் அடக்கம் செய்யப்பட்டது என்று செய்திகள் வெளியாகியுள்ளன.
அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டதாவது;
கொழும்பு 15 மட்டக்குளி பகுதியைச் சேர்ந்த 69 வயதான பெண் கொழும்பு தேசிய மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வீடு திரும்பிய நிலையில் அவரது வீட்டில் உயிரிழந்துள்ளார்.
பெண்ணின் சடலத்துக்குக் மேற்கொள்ளப்பட்ட உடற்கூற்று பரிசோதனையில் கொரோனாத் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.
இது தொடர்பில் சட்ட மருத்துவ அதிகாரி, மருத்துவ பரிசோதனை நிலையம் மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் அடங்கிய வைரஸ் தொடர்பான விஷேட நிபுணர்கள் மற்றும் தொற்று நோய் தடுப்புப் பிரிவினருடன் கலந்துரையாடப்பட்டது.
அதன்படி சடலம் நோய்க் காவியாக இருக்காது என முடிவெடுக்கப்பட்டு தொற்றால் ஏற்பட்ட உயிரிழப்பு அல்ல என உடற்கூற்று பரிசோதனைகளில் தீர்ப்பளிக்கப்பட்டது. சடலம் இறுதிக் கிரியைகளுக்காக உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.
இந்நிலையிலேயே குறித்த பெண்ணின் சடலம் அடக்கம் செய்யப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-இ)

## மரண அறிவித்தல்

### சண்முகம் தங்கம்மா



காரைநகர் பாலகாட்டைப் பிறப்பிடமாகவும் ஓமந்தை மருதங்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் தங்கம்மா 27.12.2020 அன்று இறைபதம் அடைந்தார்.
அன்னார் காலஞ்சென்ற சண்முகத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற அரிய குட்டி சுந்தரியின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற சின்னத்தம்பி ஹப்பியின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்றவர்களான அன்னம்மா, மகேஸ்வரி, இராசையா, நவரட்ணம், அமுதம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கமலாம்பிகை, அமரர் மல்லிகாதேவி, விமலாம்பிகை அமரர் திருட்செல்வம், பஞ்சலிங்கம் (லண்டன்) இந்திராணி, தேன்மொழி (அலகரபட்டகுளம், வீரமா முனிவர் வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், அமரர் சிவராசா, அமரர், சிவசுப்பிரமணியம், தவானந்தராசா, செல்வராணி (லண்டன்), பரமானந்தம், (தாரணி ஸ்ரோஸ், பண்டாரிக்குளம்), தேவராசா (சண்முகா ரெக்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சர்மிளா, கிருஷாந்தினி (லண்டன்), சியாமளா, ஜனகன் (லண்டன்), பிரதாப் (D.S.Office நல்லூர்) தாட்சாயினி, கஸ்தூரி, கோபிகா, சிந்துஜா, சோபிதன் (லண்டன்), தாரணி, தஜீவன், தாமிரா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் நதுனன், நிதன்யா, ஜஸ்வினி, ஆதிரா, தனிஷ், சதுர்ஜன், கபிலாஷ் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.12.2020) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக ஓமந்தை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

**தகவல் : குடும்பத்தினர்.**
**077 844 5127**

## மரண அறிவித்தல்

பிறப்பு
22 . 03 . 1954



இறப்பு
27 . 12 . 2020

### திருமதி பஞ்சரத்தினம் தில்லைநடேசன்


மட்டுவில் கிழக்கு சாவகச்சேரியைச் சேர்ந்த திருமதி பஞ்சரத்தினம் தில்லை நடேசன் (இராசாத்தி) 27.12.2020 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.
அன்னார் தில்லை நடேசனின் (இளைப்பாறிய நில அளவைத் திணைக்கள உத்தியோகத்தர்) அன்பு மனைவியும், சிந்துஜன் (பிரான்ஸ்) மிதிலா ஆகியோரின் தாயாரும், காலஞ்சென்ற சத்தியபாமா, தர்மகுலசேகரம் மற்றும் சத்தியராணி, சத்தியசீலன் (லண்டன்) பத்மாவதி, சூரியகுமார் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், துஷிதா, கௌதமன் ஆகியோரின் மாமியாரும், ஆத்மிகாவின் பேர்த்தியாரும், சிவராசா, ராஜலட்சுமி, காலஞ்சென்ற யோகநாதன் மற்றும் சாந்தி, மகேந்திரன், தவலீலா ஆகியோரின் மைத்துனியும் விஜிதன் - மதி, சைலஜா-இன்பகரன், விஜி மோகன்-நிதர்சி, கோவர்த்தன், நிசானி ஆகியோரின் சிறிய தாயும், சுபிதா, மயூரா, மதுஷா, மனோஜா ஆகியோரின் மாமியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.12.2020) திங்கட்கிழமை மதியம் 1.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

T.P:077 852 7987 **தகவல்: குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### முத்துச்சாமி அப்பாசாமி

**(முன்னாள் களஞ்சிய காப்பாளர்-நெல் சந்தைப்படுத்தும் சபை, துணுக்காய், முல்லைத்தீவு, கரடியனாறு)**



வாதரவத்தையைப் பிறப்பிடமாகவும், ஊரிக்காட்டினை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துச்சாமி அப்பாசாமி (முன்னாள் களஞ்சியக் காப்பாளர்- நெல் சந்தைப்படுத்தும் சபை, துணுக்காய், முல்லைத்தீவு, கரடியனாறு) அவர்கள் நேற்று (27.12.2020) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற முத்துச்சாமி இராசமணி தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்ற கனகராசா ருக்மணி தம்பதியரின் அன்பு மருமகனும், பிறேமகுமாரி அவர்களின் பாசமிகு கணவரும், காண்டீபன் (லண்டன்), காயத்திரி (தரவுப் பதிவு செயற்பாட்டாளர், மின்சார சபை, சுன்னாகம்), சிந்துஜா (அபிவிருத்தி உத்தியோகத்தர், வவுனியா தெற்கு, கல்வி வலயம்), பவித்திரா (கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்- கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்), தசீலன், தர்மிலன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சுமதி (லண்டன்), திருச்செல்வன் (மருந்தாளர், காகில்ஸ் பூட் சிற்றி, நெல்லியடி), மோகன்ராஜ்குமார் (பொறியியல் உதவியாளர் - தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை, வவுனியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், தங்கநாயகம், காலஞ்சென்ற சிவசாமி, சரஸ்வதி, கணேசநாயகம் (ஓய்வுநிலை தொழில்நுட்ப உத்தியோகத்தர்), விஜயகுமாரி, சபாநாதன் (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் - வடமாகாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், கனகேந்திரன், ஞானேந்திரராணி, பிறேமச்சந்திரன், யமுனாராணி (சுவிஸ்), காலஞ்சென்ற நடராசா, தவநாயகமலர், இரத்தினகுமார் (இளைப்பாறிய அதிபர்), சரஸ்வதி, ஜெகதிலகராசா, கிருஷ்ணவாணி ஆகியோரின் மைத்துனரும், டிலக்ஷன் (லண்டன்) கிருத்திகன் (லண்டன்), திவிஷன் (லண்டன்), கயல்விழி (யாழ்/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), துலாஞ்சலி (யா/சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை), கிருஷ்ணவி (வவு/புதுக்குளம் கனிஷ்ட வித்தியாலயம்), தருஸ்னிகன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.12.2020) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் வாதரவத்தையிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக வாதரவத்தை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: மருமக்கள்**
**077 843 5495, 077 890 9100**
**சகோதரர் - 077 066 8312**

## வேலையாள்கள் தேவை

**கிளிநொச்சியில் உள்ள திருமண மண்டபம்**
(Hotel) ஒன்றிற்கு கீழ்வரும் வேலையாள்கள்
உடன் தேவை

- சமையலாளர் (Chef)
- சமையல் உதவியாளர்
- பூங்கா பராமரிப்பாளர் (50 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள்)
- பொருள்கள் விநியோகிப்பாளர் (Delevry Boy)
- வரவேற்பாளர் (கிளிநொச்சியை சேர்ந்தவர்கள் மட்டும்)

தொடர்பு: **077 766 0396**

## தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சாவூர்

தமிழ் இணையக் கல்விக்கழகத்தினூடாக
தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில்
இளங்கலைமாணி (B.A) தமிழியல்
(Tamilology) சிறப்புப் பட்டம்!



- தொழில் வாய்ப்பா? பதவியுயர்வா? அனைவரும் விண்ணப்பிக்கலாம்
- க.பொ.த. உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தி (பழைய பாடத்திட்டம் 4 பாடங்களில்)
- உயர்தரத்தில் எத்துறையில் பயின்றவர்களும் பட்டப் படிப்பைத் தொடர முடியும்.
- இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் (University Grants Commission) அங்கீகரிக்கப்பட்டது.

**2021 - 2023 ஆம் கல்வியாண்டுக்கான விரிவுரைகள் ஜனவரி மாதம் Zoom ஊடாக ஆரம்பமாகும்.**

**பதிவுகளை மேற்கொள்ளும்**
**இறுதி திகதி 10.01.2021 வரை மட்டும்**

**வவுனியாவில்**
தமிழ் இணையக் கல்விக்கழகம்
பாரதி இன்ஸ்ரிரியூட்
A9 வீதி, புளியங்குளம்.
071 315 6109

**யாழ்ப்பாணத்தில்**
தமிழ் இணையக் கல்விக்கழகம்
பாரதி இன்ஸ்ரிரியூட்
மீசாலை மேற்கு, மீசாலை, சாவகச்சேரி.
077 805 1173, 070 305 1173


எத்தியோப்பியாவில்

# 42 சந்தேகநபர்கள் சுட்டுக்கொலை



அடிஸ் அபபா, டிசெ. 28
எத்தியோப்பியாவில் 100 பேர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் 42 நபர்கள் அந்த நாட்டு இராணுவத்தால் கொல்லப்பட்டுள்ளனர்.

பெனிசகுல்-குமுஸ் பிராந்தியத்தில் கடந்த புதன்கிழமை அதிகாலை இடம்பெற்ற இந்த சம்பவத்தில் கிராமத்தில் தூங்கிக் கொண்டிருந்த மக்களின் வீடுகளுக்கு தீ வைத்த தாக்குதல்தாரிகள் மக்களை துப்பாக்கியால் சுட்டும், கத்தியால் குத்தியும் படுகொலை செய்திருந்தனர். அந்தப் பிராந்தியத்துக்கு பிரதமர் அபிய் அஹமது வருகைதந்த மறுநாளில் இந்தத் தாக்குதல் இடம்பெற்றது. இதில் பிராந்தியத்தில் குடியேறிய சிறுபான்மை சமூகத்தினர் மீதே இந்தத் தாக்குதல் இடம்பெற்றிருப்பதோடு தாக்குதல்தாரிகள் யார் என்பது உறுதி செய்யப்படவில்லை என்று சர்வதேச மன்னிப்புச் சபை குறிப்பிட்டுள்ளது.

இந்நிலையில் தாக்குதல்தாரிகள் மீதான இராணுவத்தின் தேடுதல் வேட்டையின்போது 42 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என அரச ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. அவர்களிடம் இருந்து அம்புகள் உட்பட ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

(ம-வஇ)

## முதலாம் ஆண்டுதின அழைப்பு

கடந்த 09.01.2020 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவி

### அமரர் சின்னையா திரவியம்



**திதி: சதுர்த்தசி**

அவர்களின் ஓராண்டு நினைவுதினம், இன்று (28.12.2020) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**குடும்பத்தினர்**
**அண்ணாமலை வீதி.**
**சுதுமலை தெற்கு, சுதுமலை.**

## கண்ணீர் அஞ்சலி

# ஐயாத்துரை வரதராஜா

(ஓய்வு நிலை அதிபர்)



**தோற்றம் 15.07.1942** **மறைவு 27.12.2020**


எமது அன்பு நண்பி திருமதி ஜீத்தா தயாளன் அவர்களின் பாசமிகு தந்தை ஐயாத்துரை வரதராஜா நேற்று (27.12.2020) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

குடும்பத்தின் ஜீவனாகி
குலவிளக்காய் நீரிருந்தீர்
கொடுங்காலம் வந்ததுவோ
கொண்டும்மைச் சென்றது வோ
ஆறாது உம் பிரிவு
மீண்டுந்தான் காண்பதற்கு
மீளாதோ உம் வாழ்வு

அன்னாரின் பிரிவால் வாடித் துடிக்கும் குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**-பிறிஸ்பேன் வாழ் நண்பர்கள்**

# மூன்றாம் ஆண்டு நினைவுநாள்



தோற்றம் 13 . 12 . 1941

மறைவு 28 . 12 . 2017

**அமரர் வல்லி சபாபதி**
(ஓய்வுபெற்ற தெல்லிப்பழை
ஆதார வைத்தியசாலை பணியாளர்)

மூன்றாண்டுகள் ஆகிவிட்டன
உங்கள் நினைவுகளின் சுடர்
பெருஞ் சோதியாய் ஒளிர்கின்றது
இன்னும்,
உங்கள் வெளிச்சத்தில்தான் நம்
காலங்கள் கரைந்தாலும்
கரையாது உங்கள் நினைவுகள்

கோண்டாவில் வடக்கு,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

## கணிதம்

தரம்: 6 - 11 வரையான வகுப்புக்கள்
வீட்டில் வந்து கற்பிக்கப்படும்
தொடர்புகளுக்கு- 077 712 2968

## மோட்டார் சைக்கிள் தேவை

பொக்சர்/பிளட்டிணம்/CT100/பெசன்/பெசன்பி
ளஸ்/டிஸ்கவரி சைக்கிள் ஒன்று தேவை
077 466 9597

## வீடு வாடகைக்கு

உரும்பிராய்ச் சந்தியில் இருந்து மருதனார்மடம் செல்லும் வீதியில் 1Km தூரத்தில் அமைந்துள்ள வீடு வாடகைக்குக் கொடுக்கப்படும். (ஞானசம்பந்தர் லேன், உரும்பிராய்) களஞ்சிய சாலையாகவும் பயன்டுத்துவதற்கு உகந்தது. (துரகர் தேவையில்லை)
076 449 5070

## விற்பனைக்கு

கட்டட இடிபாடுகளும் ஓடு, கதவுகளும்
தீராந்திகளும்.
தொடர்பு:0777 23 2535

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# 31ஆம் நாள் நினைவு கூரலும் நன்றி நவிலலும்

மண்ணில் 08 . 04 . 1945



விண்ணில் 30 . 11 . 2020

**அமரர் மாணிக்கம் கணேசலிங்கம்**

கடந்த 30.11.2020 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவரின் 31ம் நாள் நினைவுப் பிரார்த்தனை இன்று (28.12.2020) திங்கட்கிழமை தொண்டமனாறு புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்திய கிரியைகள் 30.12.2020 புதன்கிழமை எமது இல்லத்திலும் நடைபெறவுள்ள தால். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும் சமேதராய் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடை பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அத்துடன் அன்னாரின் மரணச் செய்தி அறிந்து நேரில் வந்தும் தொலைபேசி மற்றும் சமூக வலைத்தளங்கள் மூலமாகவும் எமக்கு ஆறுதல் கூறியவர் களுக்கும் மலர்வளையங்கள். மலர் மாலைகள் சாத்தியோருக்கும் அஞ்சலி பிரசுரங்கள் வழங்கியோருக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவிகளை வழங்கிய உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவருக்கும் எமது மன மார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இல.36, தாழையடி லேன்,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

# நன்றி நவிலல்

தோற்றம் 02 . 12 . 1950



மறைவு 20 . 12 . 2020

யாழ். நல்லூரைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம்
இல.77, இராசாவின் தோட்டம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட
எமது குடும்பத் தலைவர்

**அமரர் சண்முகம் சொல்வேந்தன்**

அவர்களின் மறைவு செய்தி அறிந்து நேரிலும், தொலைபேசி, மின்னஞ்சல், சமூக வலைத்தளங்கள், லங்காஶ்ரீ நிறுவனம் ஊடாகவும் அஞ்சலி செலுத்தி எமக்கு ஆறுதல் கூறிய உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும், அன்னார் வைத்தியசாலையில் இருந்தபோது அன்னாருக்கு வைத்தியம் பார்த்த வைத்தியர்கள், தாதிய உத்தியோகத்தர்கள் மற்றும் வைத்தியசாலை ஊழியர்களுக்கும், யாழ். திரேசாள் ஆலய பங்கு மக்கள் செபக்குழு உறுப்பினர்களுக்கும், இலங்கை வங்கி ஓய்வூதிய சங்க உறுப்பினர்களுக்கும், மலர்வளையங்கள், மலர்மாலைகள் சாத்தியவர்களுக்கும் இறுதி நிகழ்வில் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், சகல நிகழ்வுகளிலும் எம்முடன் கைகோர்த்து இன்றுவரை எமக்கு சகல உதவிகளையும் செய்த உற்றார், உறவி னர், நண்பர்களுக்கும் இறுதிச்சடங்கை நல்லமுறையில் நடத்துவதற்கு உதவிய சகலருக் கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

திருமதி செலஸ்டினா (ரஞ்சினி) மனைவி
திரு.சொ.சுதர்சன் (மகன்)
திருமதி சுபாசினி இராஜசுரேந்திரன் (மகள்)
திரு.இரா.இராஜசுரேந்திரன் (மருமகன்)
திருமதி உஷாந்தி சுதர்சன் (மருமகள்)

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 15 . 08 . 1948



மறைவு 24 . 12 . 2020


கைதடி கிழக்கு வீரமாகாளி அம்பாள் ஆலய நிர்வாகப்
பொறுப்பாளரும், கைதடி விவா மின்பொருள் இரும்பு
வாணிப உரிமையாளருமான திரு.க.சசிகுமார்
(சசி), திரு.க.ராசா, திரு.க.ராயூ
(தேசிய சேமிப்பு வங்கி உத்தியோகத்தர்)
அவர்களின் அன்புத் தாயார்

**கதிரவேலு பூமணி**
(கைதடி கிழக்கு, கைதடி)

அவர்களின் மறைவுச்செய்தியறிந்து ஆழ்ந்த துயர் அடைகின்றோம். அன்னாரின் ஆத்மா அமைதியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவருடைய குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும் அனு தாபத்தையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தகவல்:
நா. விஜயகுமார் (சங்கர்) குடும்பம் - சுவிஸ்
மெ.சந்திரன் குடும்பம் - சுவிஸ்
திருமதி சங்கரப்பிள்ளை சடப்பிள்ளை - கைதடி கிழக்கு, கைதடி.

## மரண அறிவித்தல்



### சிவஸ்ரீ ச.ஜெயந்திநாதக் குருக்கள்

(பிரதம குரு; ஆதீனகர்த்தா, நீர்வேலி, வாய்க்காற்றரவை மூத்த விநாயகர் ஆலயம்,
மஹோற்சவ குரு கைதடி வீரகத்திப்பிள்ளையார் ஆலயம்,
மஹோற்சவ குரு சிறுப்பிட்டி செல்லப்பிள்ளையார் ஆலயம்)

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவஸ்ரீ ச.ஜெயந்திநாதக் குருக்கள் 26.12.2020 சனிக்கிழமை நள்ளிரவு சிவபத மடைந்தார்.

அன்னார் நீவேலி வாய்க்காற்றரவை மூத்த விநாயகர் ஆலய ஆதீன கர்த்தா சிவஸ்ரீ சந்திரசேகரக்குருக்கள் சுப்புலட்சுமி அம்மா தம்பதியரின் புதல்வரும், சுன்னாகம் சிற்சபேச சர்மா மகேஸ்வரி தம்பதியரின் மரு மகனும், வசந்தியின் கணவரும், தாட்சாயினி (கனடா), நாகலட்சுமி (கனடா) ஆகியோரின் சகோதரரும், குமாரசாமிக் குருக்கள் (கீரிமலை), சுரேந்திரக் குருக்கள் (கனடா) வைத்தியநாத சர்மா (யாழ்ப்பாணம்), பாஸ்கரசர்மா (நல்லூர்) ஆகியோரின் மைத்துனரும், சந்திரசேகர சர்மா (மயூ), சுபலட்சுமி (வசுந்தரா), பிக்ஷாடனசர்மா (குமரன்), சரண்யா சர்மா (விகாஷ்) ஆகியோரின் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 27.12.2020 ஞாயிற்றுக்கிழமை நீர் வேலியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று, பி.ப 2.00 மணியளவில் குடும்ப மயானத்திற்கு எடுத்துச் சென்று தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.


## வேலை ஆட்கள் தேவை

இலக்கம் 194, யாழ் வீதி, மானிப்பாயில் அமைந்துள்ள மிக்ஷர் உற்பத்தி செய்யும் எமது நிறுவனத்திற்கு பொதி செய்வதற்கு பெண்கள் தேவை.

மேலதிக விவரங்களுக்கு:
076 640 3388


## மரண அறிவித்தல்

உதிப்பு
17 . 02 . 1953



உதிர்வு
27 . 12 . 2020

### திருமதி செல்வராணி சிவபாலசுந்தரம்

தபாற்கந்தோர் வீதி பெருங்குளம் சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வதிவிட மாகவும் கொண்ட திருமதி செல்வராணி சிவபாலசுந்தரம் நேற்று (27.12.2020) ஞாயிற்றுக் கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - பரமேஸ்வரி (சின்னக்கிளி) தம்பதி யரின் ஏக புதல்வியும் காலஞ்சென்றவர்களான கனகசிங்கம் - பராசக்தி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சிவபாலசுந்தரத்தின் அன்பு மனைவியும் சுகந்தினியின் பாசமிகு தாயாரும் சுரேஷ் (வவா - றோயல் வெதுப்பக உரிமையாளர் - சாவகச்சேரி ) இன் அன்பு மாமியாரும் ஹம்சா. ஜெனிதன் கயந்தன் ஆகியோரின் அன்பு பேர்த்தியு மாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.12.2020 ) திங்கட்கிழமை அவரது இல்லத் தில் நடைபெற்று மதியம் 12.00 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்


இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

தகவல் : குடும்பத்தினர்.
சுரேஷ் (மருமகன்)
077 614 6135

## மரண அறிவித்தல்

### ஐயாத்துரை வரதராஜா

(ஓய்வுபெற்ற அதிபர் - உசன் இராமநாதன் ம.வி, எழுதுமட்டுவாள் கணேசா வித்தியாலயம்)



பிறப்பு: 15.07.1942 இறப்பு: 27.12.2020

அல்வாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் எழுதுமட்டுவாளை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற அதிபர் ஐயாத்துரை வரதராஜா (உசன் இராமநாதன் ம.வி, எழுதுமட்டுவாள் கணேசா வித்தியாலயம்) அவர்கள் (27.12.2020) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரை இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற குலசேகரம்பிள்ளை J.P (செயாமன்) நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சிவபாக்கியம் அவர்களின் அன்புக் கணவரும், துவாரகா, வைகுந்தன் (கனடா), யசீந்தா (அவுஸ்திரேலியா), கஜீபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், செல்வறஞ்சன் (ஆசிரியர், யா/ கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம்), அபிராமி (கனடா), தயாளன் (அவுஸ்திரேலியா) கௌசிகா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், மேலும் ரதிதேவி, புண்ணியபவான் (ஜேர்மனி) நிரஞ்சனாதேவி (ஜேர்மனி), சத்திய பவான் (ஜேர்மனி), சிவதேவி (கனடா), சதீஸ் (கனடா) ஆகியோரின் மாமனாரும், சிவசிரோன்மணி, ஜீவராசா (நோர்வே) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், சிவராசா (கனடா), அன்னலட்சுமி (நியூசிலாந்து), சிவரத்தினம், இந்திராணி (ஓய்வுபெற்ற ஆசிரியர்), சிவானந்தம் (வரன்), சிவாகரன் (கனடா), சிவராணி, சிவரூபன் (சுவிஸ்) காலஞ்சென்ற கதிர்காமத்தம்பி, கௌரி (நோர்வே) குகாம்பிகை, காலஞ்சென்ற வேதாரணியம் (தபால் அதிபர்) நவரத்தினராசா (ஓய்வுபெற்ற கிராம சேவகர்), சாந்தநாயகி, தெய்வேந்திரம், நவமணிதேவி (உப தபால் அதிபர்) பவானி (கனடா), கௌரி (தயாளினி - சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும், ரஜீவன், கௌசீபன், அக்சயா, கௌசிகா ஆகியோரின் பெரியப்பாவும், Dr.சிந்துகன் (வைத்தியர்-கொழும்பு) Eng.கஜானன் (பொறியியலாளர்- கொழும்பு) தனுஜன் (சிறி ஜெயவர்த்தனபுரம் பல்கலைக்கழகம்), சாருஜன் (யாழ் இந்துக் கல்லூரி) அனுஸ்கா (கனடா), அக்சயன் (அவுஸ்திரேலியா) அகரன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.12.2020) திங்கட்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் இல்லத்தில் நடைபெற்று, பின்னர் இராமியன் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கண்டி வீதி, எழுதுமட்டுவாள்.

தகவல்:
குடும்பத்தினர்.

## கொரோனா....

இதுவரை நாட்டில் கொரோனாத் தாக்கத்தால் சாவடைந்தவர்களின் எண்ணிக்கை 191 ஆக அதிகரித்துள்ளது. இவர்களில் 178 பேர் கொரோனாவின் மூன்றாவது அலையில் உயிரிழந்துள்ளனர். (எ-22)

## சங்கானையில்...

கூடத்தில் நேற்று நடத்தப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 4 பேருக்குத்தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

சங்கானையைச் சேர்ந்த ஒருவருக்கும், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை தனிமைப்படுத்தல் விடுதியில் சிகிச்சை பெற்றுவந்த தென்னிலங்கையைச் சேர்ந்த ஒருவருக்கும், கோப்பாய் தனிமைப்படுத்தல் மையத்தில் உள்ள ஒருவருக்கும், கடற்படைத் தனிமைப்படுத்தல் நிலையத்தைச் சேர்ந்த ஒருவருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

சங்கானையில் தொற்றுடன் இனங்காணப்பட்டவர் மருதனார்மடம் கொரோனாக் கொத்தணியுடன் தொடர்புடையவர். முன்னர் தொற்றுடன் இனங்காணப்பட்ட ஒருவருடன் நேரடியான தொடர்பைப் பேணியவர். இவர் தனிமைப்படுத்தப்பட்டிருந்த நிலையில் அவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மருதனார்மடம் கொரோனா கொத்தணியில் இதுவரை 109 பேர் தொற்றுடன் அடையாளம காணப்பட்டுள்ளனர். (எ-இ)

## மீண்டும்...

வரவு செலவுத் திட்டங்கள் தோற்கடிக்கப்பட்டமையால்மேயராக இருந்த ஆனோல்ட் மற்றும் பிரதேச சபைத் தவிசாளராக இருந்த தியாகமூர்த்தியும் பதவி விலகினர். யாழ்ப்பாணம் மாநகர சபை மற்றும் நல்லூர் பிரதேச சபை என்பனவற்றின் மேயர் மற்றும் தவிசாளர் தெரிவுகள் எதிர்வரும் 30ஆம் திகதி மீண்டும் இடம்பெறவுள்ளன.

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சபை உறுப்பினர்களுடனான கலந்துரையாடல் கடந்த 24ஆம் திகதி தமிழ் அரசுக் கட்சியின் தலைமையகம் அமைந்துள்ள மார்ட்டின் வீதியில் நடைபெற்றிருந்தது. அதில் இறுதி முடிவு எதுவும் எட்டப்பட்டிருக்கவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்கள் இடையிலான கலந்துரையாடல் நேற்று நடைபெற்றது.

அதில் யாழ்ப்பாண மாநகர சபை விவகாரம் ஆராயப்பட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் யாரை நிறுத்த வேண்டும் என்பதை ஏனைய கட்சிகள் தீர்மானிக்க முடியாது எனவும், மீளவும் ஆனோல்டையே களமிறக்குவது என்று தீர்மானி க்கப்பட்டது.

நல்லூர் பிரதேச சபை தொடர்பில் ஆராயப்பட்டது. ரெலோவுக்கு தவிசாளர் பதவி தரப்பட வேண்டும் என்று அந்தக் கட்சி வலியுறுத்தியது. அந்தக் கட்சி சார்பில் தவிசாளர் பதவிக்கு பெயர் குறிப்பிடப்படுவர், முன்னைய தவிசாளரின் வரவு செலவுத் திட்டத்தை தோற்கடிக்க பல்வேறு வழிகளிலும் முயற்சி செய்தவர் என்றும் அவ்வாறான ஒருவருக்கு எவ்வாறு தவிசாளர் பதவியை வழங்கலாம் எனவும், ஏனையோர் கேள்வி எழுப்பினர். இது தொடர்பில் நாளை 29ஆம் திகதி முடிவு செய்யப்படும். (ஒ,5)

## புதுக்குடியிருப்பில்...

என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். இதனால் குறித்த தொற்றாளருடன் தொடர்பினை மேற்கொண்ட நபர்கள் தங்களது பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரியுடன் தொடர்புகொண்டு பி.சி.ஆர் சோதனையை முன்னெடுக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

வடமாகாணத்தில் உள்ள கொரோனா நிலவரம் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ். போதனா மருத்துவமனையின் ஆய்வுகூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவைச் சேர்ந்த 37 வயதுடைய ஆண் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது. இந்த நபர் தம்புள்ள சந்தைக்குச் சென்று மரக்கறிகளை கொள்வனவு செய்து வந்து வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்பவர் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் எழுமாற்றாக பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டபோது குறித்த நபருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர் குறித்த பகுதியில் பல பொதுமக்களோடு தொடர்பிலே இருந்திருக்கின்றார். எங்களுக்கு கிடைத்த ஆய்வுகூட முடிவுகளைப் பார்க்கின்ற போது அவருக்கு ஏற்பட்டிருக்கும் கொரோனா மிகவும் வீரியமானதாக இருக்கின்றது. அதனால் அவரில் இருந்து பலருக்கு தொற்று ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் இருக்கின்றன.

அவரோடு தொடர்பிலே இருந்தவர்கள் தயவுசெய்து உங்களது பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரியுடன் தொடர்பு கொண்டு பரிசோதனைகளை முன்னெடுப்பதன் மூலம் உங்களது பிரதேசத்தில் கொரோனா பரவலைக் கட்டுப்படுத்த முடியும் -என்றார். (ம-இ)

## இரணைமடு....

வேண்டும் என்றும் நீர்ப்பாசனத் திணைக்களம் அறிவித்துள்ளது.

தொடர்ந்து மழை பெய்யும் சந்தர்ப்பங்களில் மக்கள் அவதானமாகச் செயற்பட வேண்டும் என்று இடர் முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதேவேளை, கனகாம்பிகைக்குளம், அக்கராயன்குளம், பிரமந்தனாறு குளம் போன்றவை தற்போது வான் பாய்கின்றன. (எ-6)

## வடக்குக்கு...

னான காலநிலை காணப்படும் என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது.

வளிமண்டலவியல் தளம்பல் காரணமாக கடந்த 24 மணி நேரத்தில் வடக்கு, கிழக்கு, வடமத்திய, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும், பதுளை மாவட்டத்திலும் பலத்த மழை எதிர்பார்க்கப்படுகின்றது.

சில இடங்களில் 150 மில்லி மீற்றருக்கு அதிகமான மழை பெய்யும். ஏனைய இடங்களில் மாலை அல்லது இரவு நேரங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யலாம். நில இடங்களில் 75 மில்லிமீற்றர் மழை பெய்யக்கூடும்.

தற்காலிக வலுவான காற்று மற்றும் இடியால் ஏற்படும் அபாயத்தைக் குறைப்பதற்கு மக்கள் தயாராக இருக்க வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## 41000....

பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 41 ஆயிரத்தைக் கடந்துள்ளது. நேற்று மட்டும் 668 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

நாட்டில் மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 41 ஆயிரத்து 48 ஆக அதிகரித்துள்ளது. கொரோனாவின் மூன்றாவது அலை மூலம் இதுவரையில் 37 ஆயிரத்து 390 பேருக்கு வைரஸ் தொற்றியுள்ளது. மொத்தத் தொற்றாளர்களில் 32 ஆயிரத்து 701 பேர் குணமடைந்துள்ளனர். 8 ஆயிரத்து 160 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (எ-22)

## சிறிய...

மாகாணங்களின் சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள் இந்த நோக்கத்துக்குத் தேவையான ஏற்பாடுகளை செய்து வருகின்றனர் என்று அமைச்சின் பொதுச் சுகாதார சேவைகளின் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், மருத்துவர் லால் பனபிட்டிய தெரிவித்தார்.

அதேவேளை, தற்போது நாடு முழுவதும் சுமார் 70 கொரோனா சிகிச்சை நிலையங்கள் உள்ளன. (ஒ-இ)

## வரலாற்றை...

னருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

'அழிக்கப்படும் சாட்சியங்கள்' என்ற நூல் வெளியீடு நேற்றுப் பிற்பகல் யாழ்ப்பாணம் பொது நூலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

**ஏக்கங்களுடன் சாவு**

போரால் பல்வேறுபட்ட இளையோர் வகைதொகையின்றி இராணுவப் படைகளாலும் புலனாய்வுப் பிரிவினராலும் கைதுசெய்யப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட நிலையில் அவர்களைத் தேடி அலைந்த அவர்களின் பெற்றோர்கள், பிள்ளைகள், சகோதரங்கள், உற்றார், உறவினர்கள் எனப் பலர் தமது இறுதி மூச்சுவரை மகனை அல்லது மகளை அல்லது சகோதர சகோதரிகளை அல்லது உற்றவரை, உறவினரைத் தேடி அலைந்து, அவர்களுக்காக நீதிகோரிய போராட்டங்களில் தொடர்ந்து ஈடுபட்டு இறுதியில் நோய் வாய்ப்பட்டு இறப்பைத் தழுவிக் கொண்ட 74 பேரின் பதிவுகள் இந்த நூலில் காணப்படுகின்றன. ஏமாறிய நிலையில் இவ்வுலகைவிட்டு ஏகியவர்களின் விபரக்கோவையே இன்று வெளியிடப்படும் நூல்.

**இனப் படுகொலை**

பண்டைய தமிழ் மக்களின் வரலாறுகள், அவர்களின் இருப்புக்கள், பாரம்பரியங்கள் என்பன நூல் வடிவிலோ, ஓலைச் சுவடிகளிலோ அல்லது கற்களில் வடித்தோ முறையாக பேணப்படாமையால் இன்று எமது சரித்திர வரலாறுகள் திரிபுபடுத்த ப்பட்டு வருகின்றன. தினம் தினம் மாற்றி எழுதப்பட்டு வருகின்றன. பெரும்பான்மை மக்களின் சாசனங்கள் வாயிலாக வரலாறுகள் தமிழர்க்கு எதிராகத் திரிக்கப்பட்டு, எழுதப்பட்டு வருகின்றன. இனப் படுகொலையின் ஒரு அம்சமாகவே இதனை நாம் பார்க்க வேண்டியுள்ளது.

**மனப்பாங்கு மாறவேண்டும்**

உலக சனத்தொகையில் தமிழர்களை விட குறைந்த அளவில் உள்ள சிங்கள மக்கள் ஓரளவுக்கு செறிந்து வாழுகின்ற இந்த நாட்டில், தமிழ் மக்களுக்கு அவர்களின் உரிமையைக் கொடுத்துவிட்டால் சிங்கள மக்களுக்கு இருக்க நாடு இல்லாமல் போய்விடும், அவர்களுக்கு என்று ஒரு தேசம் இல்லாமல் போய்விடும் எனப் பயப்படுகின்றார்கள் சிங்கள அரசியல்வாதிகளும் அவர்களைச் சார்ந்தவர்களும், இலங்கைத் தீவை விட சிறிய நாடாகிய சிங்கப்பூரில் பல மொழிகளைப் பேசுகின்ற பல் இன மக்கள் வாழுகின்ற போதும் அந்த நாட்டில் மொழி வேறுபாடு இல்லை. மத வேறுபாடு இல்லை. ஆனால் அங்கு சுபீட்சம் நிலவுகின்றது. நாடும் வளம் பெற்று வளர்ந்து வருகின்றது என்பதை அவர்கள் உணர வேண்டும்.

**ஆவணமாக வேண்டும்**

போர் நிறைவு பெற்ற 2009ஆம் ஆண்டு காலப்பகுதியில் இராணுவத்திடம் தமது உறவினரை முறையாக கையளித்தவர்களை இழிவுபடுத்தும் விதத்தில் அவ்வாறான கையளிப்புக்கள் எதுவும் நடக்கவில்லை அவ்வாறான எந்தவொரு அரசியல் கைதிகளும் தம்மிடம் இல்லை எனக் கூறி இப்போது மறுப்புத் தெரிவிக்கப்பட்டு வருகின்றது. இன்றைய கை நூலில் ஆவணப்படுத்தப்படும் வரலாற்றுப் பதிவுகள் தொடர்ந்து எம் கைகளில் கிட்டாமல் போனால் இன்னும் சற்றுக் காலம் செல்ல இந்த நிகழ்வுகள் எல்லாம் பொய்யாகப் புனையப்பட்டவை என ஜெனீவாவிலும் உலக அரங்கிலும் கூறத் தொடங்கிவிடுவார்கள். ஆகவேதான் மரணித்தோரின் பதிவுகள் இந்நூலின் மூலம் ஆவணப்படுத்தப்பட்டு வருங்கால நிரூபணங்களாக பதியப்பட்டுள்ளன.

**விடிவு கிட்டும்**

எமது வரலாறுகள் நன்மையானதோ தீமையானதோ அனைத்தும் ஆவணமயப்படுத்தப்பட வேண்டும் என்பது அத்தியாவசியமாகின்றது. முன்னர் தான் நாம் எமது சரித்திரங்களை எழுதிவைக்கவில்லை. தொடர்ந்தும் அவ்வாறு வாளாதிருப்பது எமக்கு பலத்த பாதிப்பை ஏற்படுத்தும். இவ்வளவு கோரக் கொடுமைகளின் பின்பும் தமிழ் மக்கள் அமைதியாக இங்கு இருந்து வருவது பிறநாட்டவர்க்கு வியப்பை அளித்தாலும் ஏதோ ஒரு விடிவு காலம் அண்மையில் வரப் போகின்றது என்ற எண்ணமே எம் மக்களின் எதிர்பார்ப்பாக அமைந்து எம்மை ஓட்டி வருகின்றது. காலத்துக்கு காலம் மாற்றங்கள் ஏற்படுவதே மனித வாழ்க்கை. தொடர்ந்து கஷ்டத்தையே எம் மக்கள் அனுபவித்து வரவேண்டிய அவசியமில்லை. விடிவு விரைவில் வரும் என நம்புவோம் - என்றார். (ஒ)

## யாழ்...

த்தைச் சேர்ந்த மாணிக்கம் பாலசிங்கம் (வயது-69) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர் இரு தினங்களாகக் காணாமல் போயிருந்த நிலையில், குளத்தில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார் மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் உடல் உறவினர்களிடம் கையளிக்கப்படவுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ-26)

## ராஜபக்ச....

போன்ற சதித்திட்டம் இடம்பெற்று வருகின்றது.

இவ்வாறு இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

அரசுக்குள் இருந்துகொண்டே அரசுக்கு எதிரான செயற்பாடுகளை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மேற்கொண்டு வருகின்றது. சூழ்ச்சியில் ஈடுபடுவோரை விரைவில் அரசு அம்பலப்படுத்தும்.

எந்த சதித்திட்டங்களாலும் ராஜபக்ச அரசைக் கவிழ்க்கவே முடியாது. அரசுக்குள் இருந்துகொண்டே சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியினருடன் 'டீல்' பேசுபவர்கள் விரைவில் முகவரியற்றுப் போவார்கள் என்றார். (எ-22)

## திரையரங்கு...

தற்கு கலாசார அலுவல்கள் அமைச்சர் பிரதமர் மஹிந்த ராஜபக்ச அனுமதியளித்துள்ளார்.

தனிமைப்படுத்தப்பட்டுள்ள பிரதேசங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து பிரதேசங்களிலுமுள்ள திரையரங்குகள் ஜனவரி முதலாம் திகதி முதல் திறக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

# தென்னாபிரிக்கா ஆதிக்கம்



இலங்கை -தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்கா அணி ஆதிக்கம் செலுத்தி வருகின்றது.

செஞ்சூரியன் மைதானத்தில் நடைபெற்று வரும் போட்டியில் இரண்டாம் நாளான நேற்று தென்னாபிரிக்கா வேகப்பந்து வீச்சாளர்களின் அபார பந்துவீச்சால் இலங்கை அணி 396 ஓட்டங்களுக்குள் சுருண்டது. துடுப்பாட்டத்தில் அதிகபட்சமாக தசுன் சானக 66 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் சிபம்லா 3 இலக்குகளை கைப்பற்றினார்.

தனது முதல் இன்னிங்சுக்காக தென்னாபிரிக்கா சார்பில் எல்கர், மக்ரம் இணை களம் புகுந்தது. இருவரும் நிதானமான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தினர். இணைப்பாட்டமாக 141 ஓட்டங்கள் பெற்றவேளை மக்ரம் 68 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தொடர்ந்து வந்த டூசன் 15 ஓட்டங்களுடனும் ஆரம்ப வீரராக களமிறங்கி சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்திய எல்கர் 95 ஓட்டங்களுடனும் பவிலியன் திரும்பினர். அணித்தலைவர் டி கொக் 18 ஓட்டங்களுடன் ஏமாற்றினார்.

அடுத்து இணைந்த பிளசிஸ், பவுமா இணை நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. நேற்றைய நாள் முடிவில் 4 இலக்குகளை மாத்திரம் இழந்து 317 ஓட்டங்களை குவித்துள்ளது. பிளசிஸ் 55 ஓட்டங்களுடனும் பவுமா 41 ஓட்டங்குளுடனும் களத்தில் உள்ளனர். பந்து வீச்சில் ஹசரங்க, சானக, குமார, பெர்ணாண்டோ தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். (ரி4)

# இந்தியா நிதானம்



மெல்போர்ன், டிசெ.28

ஆஸ்திரேலியா, இந்திய அணிகளுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் இரண்டாம் நாளில் இந்திய அணி 82 ஓட்டங்களால் முன்னிலையில் உள்ளது. இந்திய அணித் தலைவர் ரகானே சதம் விளாசினார்.

ஆஸ்திரேலியா சென்ற இந்திய அணி நான்கு போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது. அடிலெய்டு டெஸ்டில் சரிந்த இந்திய அணி, 10 என்ற ரீதியில் தொடரில் பின்தங்கியுள்ளது.

இரு அணிகள் மோதும் இரண்டாவது டெஸ்ட், மெல்போர்னில் நடக்கிறது. முதல் இன்னிங்ஸில் ஆஸ்திரேலியா 195 ஓட்டங்கள் எடுத்தது. முதல் நாள் முடிவில் இந்திய அணி முதல் இன்னிங்சில் ஒரு விக்கெட் இழப்புக்கு 36 ஓட்டங்கள் எடுத்திருந்தது. சுப்மன் (28), புஜாரா (7) ஆகியோர் ஆட்டமிழக்காதிருந்தனர்.

நேற்று இரண்டாவது நாள் ஆட்டம் ஆரம்பமானது. சுப்மன் 45 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். புஜாரா 17 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். ஹனுமா விஹாரி 21 ஓட்டங்கள் எடுக்க, ரிஷாப் பன்ட் 29 ஓட்டங்கள் எடுத்து பவிலியன் திரும்பினார்.

பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய ரகானே, டெஸ்ட் அரங்கில் தனது 12ஆவது சதத்தைப் பெற்றார். வேகமாக அடித்த காற்று, மழை காரணமாக இரண்டாவது நாள் ஆட்டம் உரிய நேரத்துக்கு முன்னதாக முடிவுக்கு வந்தது. இந்திய அணி முதல் இன்னிங்சில் 5 இலக்குகளை இழந்து 277 ஓடடங்கள் எடுத்து, 82 ஓட்டங்கள் முன்னிலை பெற்றது. ரகானே (104), ஜடேஜா (40) ஆகியோர் ஆட்டமிழக்காதுள்ளனர். (எ-இ)

# பந்து வீச்சாளர்களை பாராட்டினார் கோலி!

புதுடில்லி, டிசெ.28

மெல்போர்ன் டெஸ்டில் அற்புதமாக பந்து வீசி ஆஸ்திரேலியாவை 195 ஓட்டங்களில் சுருட்டுவதற்கு காரணமாக விருந்த பந்துவீச்சாளர்களை கோலி பாராட்டியுள்ளார்.

ஆஸ்திரேலியா -இந்தியா இடையிலான 2 ஆவது டெஸ்ட் நேற்று மெல்போர்னில் தொடங்கியது. முதல் நாள் ஆட்ட முடிவில் ஆஸ்திரேலியா முதல் சுற்றில் 195 ஓட்டங்களில் சுருண்டது.

பும்ரா 4 இலக்குகளும், அஸ்வின் 3 இலக்குகளும், முகமது சிராஜ் 2 இலக்குகளும் வீழ்த்தினர்.

இந்தியாவின் பந்துவீச்சு மிகவும் அபாரமாக இருந்தது. அடிலெய்டு படுதோல்வி குறித்து கவலை அடையாமல் புது நம்பிக்கையுடன் விளையாடினர். அறிமுகமான முகமது சிராஜ் 2 ஆவது சுற்றில் அற்புதமாக பந்து வீசினார்.

எவரும் எதிர்பார்க்காத வகையில் அஸ்வின் முன்னதாகவே பந்துவீச அழைக்கப்பட்டார். அவர் மேத்யூ வடே, ஸ்மித் ஆகியோரை வீழ்த்தி அடித்தளம் அமைத்துக் கொடுத்தார். இந்திய அணித் தலைவர் கோலி சொந்த நாடு திரும்பியுள்ள நிலையில், பந்துவீச்சாளர்களைப் பாராட்டியுள்ளார்.

கோலி டுவிற்றர் பக்கத்தில் முதல் நாள் நமக்கு மிகவும் சிறப்பாக அமைந்தது. பந்துவீச்சாளர்களிடம் இருந்து சிறந்த காட்சி வெளியானது. திடமாக போட்டியை முடித்துவிட்டனர் எனப் பதிவிட்டுள்ளார். (ற-இ)

பொருளியற் கல்லூரி

நாவலர் வீதி யாழ்ப்பாணம் | கே.கே.எஸ்.வீதி சுன்னாகம்

BARATHY - சித்தன்கேணி

எமது மூன்று நிறுவனங்களிலும்

- இணையவழிக் கற்கை Zoom Class

A/L 2021, 2022

கலை வர்த்தகம்

அனைத்துப் பாடங்களும் நடைபெறும்

- பதிவுகளை எமது மூன்று நிறுவனங்களிலும் கட்டணம் செலுத்தி பெற்றுக்கொள்ளவும்
- வெளி மாணவர்களும் பதிவு செய்யலாம்
- விடுமுறைக்கால விசேட மேலதிக வகுப்புக்கள்
- வினாவிடை வகுப்புக்கள் நடைபெறும்
- கையேடுகளும் வழங்கப்படும்
- அனைத்துப் பாடங்களிற்கும் இணையவழி பரீட்சைகளும் நடைபெறும்

மூன்று நிறுவனங்களிலும் 28.12.2020 - 01.01 2021 வரை

பதிவுகள் மேற்கொள்ளவும்

| | | |
|---|---|---|
| யாழ்.நகரில் | காலை - 8.00 - 12.00 வரை | 077 220 9651<br>077 545 9856 |
| சுன்னாகம் | மாலை - 3.00 - 5.30 வரை | 076 638 5294 |
| BARATHY சித்தன்கேணி | மாலை - 3.00 - 5.30 வரை | 077 940 8682 |

மேலதிக விவரங்களுக்கு - 077 376 3511

Note: பதிவுசெய்யப்படும் மாணவர்கள் மாத்திரமே இணைத்துக்கொள்ளப்படுவர்.

# மரண அறிவித்தல்

பிறப்பு . 20 . 07 . 1953



இறப்பு . 27 . 12 . 2020

## திருமதி லலித்தா அலெக்ஷாண்டர்

யாழ்.ஆஸ்பத்திரி வீதி

யாழ். ஆஸ்பத்திரி வீதியை வதிவிடமாக கொண்ட லலித்தா அலெக்ஷாண்டர் அவர்கள் 27.12.2020 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.செலமன் அன்ரனி சந்தியாகோ, மேரி மக்ரலின் தங்கமணி தம்பதியரின் அன்புப் புதல்வியும், அந்தோனிப்பிள்ளை, மேரி ஜோசபின் தம்பதியரின் அன்பு மருமகளும், திரு. அந்தோனிப்பிள்ளை அலெக்சாண்டர் (ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும், திருமதி அன்ரனிற்றா (மேலதிக மாவட்ட காணிப் பதிவாளர் ADR ), கலாநிதி. றுக்ஷான் (சிரேஷ்ர விரிவுரையாளர் வியாபார கற்கைகள் பீடம், வவுனியா வளாகம், யாழ் பல்கலைக்கழகம்), மிறோஷன் (ஆசிரியர், மு/ உடையார்கட்டு மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு தாயாரும், காலஞ்சென்ற செலமன் சந்தியாகோ, மரிஸ்செல்லா பத்மினி மரியநாயகம், காலஞ்சென்ற கிரிஸ்ரி சூரியகுமார் ஆகியோரின் அன்பு சகோதரியும், மேரி அக்ஷயா, அபினாஸ், மெரின் அன்றியா, சோர்ஜேனியா, எய்டன், குருசயன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (28.12.2020) திங்கட்கிழமை 3 மணி அளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

878, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தகவல் : குடும்பத்தினர்.



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.12.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.